# சங்கர சோழன் உலா
# குலோத்துங்க சோழன் கோவை
## (பாட்டுடைத் தலைவர்கள்)

★

**இலக்கியங்களும் - கல்வெட்டுக்களும்**
**ஒன்றாய் இணையும் ஓர் வரலாற்று நூல்**

(பதிப்பு 1989)

★

ஆசிரியர்
**N. சேதுராமன்,** B. Sc., D. M. I. T.,
*இயக்குநர், இராமன் & இராமன் பிரைவேட் லிமிடெட்*
*நாகேஸ்வரன் வடக்கு வீதி*
**கும்பகோணம் - 612001**

# சங்கர சோழன் உலா
# குலோத்துங்க சோழன் கோவை
## (பாட்டுடைத் தலைவர்கள்)

★

**இலக்கியங்களும் - கல்வெட்டுக்களும்**
**ஒன்றாய் இணையும் ஓர் வரலாற்று நூல்**
(பதிப்பு 1989)

★

ஆசிரியர் :
**N. சேதுராமன்,** B. Sc., D. M. I. T.,
*இயக்குநர், இராமன் & இராமன் பிரைவேட் லிமிடெட்*
*நாகேஸ்வரன் வடக்கு வீதி*
**கும்பகோணம் - 612001**

( அனைத்துப் பதிப்புரிமையும் ஆசிரியருக்கே )

**Price Rs. 16/-**

## பொருளடக்கம்

| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | iii |
| | முகவுரை | 2 |
| 1. | பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு | 3 |
| 2. | பள்ளிப்படை இராஜகெம்பீர ஈஸ்வரமுடையார் | 21 |
| 3. | நன்றி மறவாத குலோத்துங்கன் | 26 |
| 4. | பாண்டியர் உள்நாட்டுப் போர் | 29 |
| 5. | சங்கர சோழன் உலா | 45 |
| 6. | குலோத்துங்க சோழன் கோவை | 63 |
| 7. | இரண்டாம் இராஜாதிராஜன் - முடி சூடிய நாள் காலக் கணக்கீடு | 74 |
| 8. | குலோத்துங்க சோழன் கோவை - (சிந்தனைக்குரிய) சில பாடல்கள் | 79 |

173921

## முன்னுரை

கி. பி. 1930 நவம்பர் மாதம் 3-ஆம் தேதி ஐப்பசி மாதம் 18-ஆம் தேதி, பூர்வபக்ஷத்து துவாதசியும், உத்திரட்டாதியும் பெற்ற திங்கட்கிழமை பிறந்தேன். இளமையில் கும்ப கோணம் அரசினர் ஆடவர் கல்லூரியில் B. Sc (இரசாயனம்) பயின்றேன். பிறகு சென்னை Madras Institute of Technology கல்லூரியில் சேர்ந்து 1953-இல் Automobile Engineering பட்டம் பெற்றேன். எனது தந்தையார் P S. நாராயண அய்யர் அவர்கள் பஸ் போக்குவரத்துத் தொழிலை (Bus Transport) நடத்தி வந்தார். என்னையும் அதில் ஈடுபட வைத்தார். 1962-இல் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று டீசல் இஞ்ஜின் சம்பந்தமான சிறப்புப் பயிற்சி பெற்று வந்தேன். எனது தந்தையார் 1968-இல் கால மானார்கள். 1972-இல் எங்களது பஸ்கள் தேசீயமயமாக்கப் பட்டன. தற்போது புதிய கார்கள், டிராக்டர்கள், டிரைலர்கள் விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளேன். இது எனது முன்னோர் எனக்கு அளித்துவிட்டுச் சென்ற தொழிலாகும். இத்தொழிலே எனக்குச் சோறு போடுகிறது. அவ்வளவுதான்.

நிற்க, எனக்குள்ளே எனக்கு என்று சில ஆசாபாசங்கள் இருக்க வேண்டாமா? நிச்சயமாக உண்டு. நான் ஒரு பழமைப் பித்தன்; கல்வெட்டுப் பைத்தியம்; அருமையான ஆலயங்களைக் கண்டால் ஆனந்தக் கண்ணீர் விடுவேன்; இடிந்த கோயில்களைக் கண்டால் நானும் இடிந்துபோய் விடுவேன். சரித்திர வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்ட தொல்பொருள், பழம்பொருள் சின்னங்களைக் கண்டால் உணர்ச்சி வயப்பட்டு என்னையே மறந்துவிடுவேன். பாழ் அடைந்த, இடிந்து கிடக்கும் ஆலயங்களுக்குச் சென்று அப் பிரகாரங்களில் சிறிதாவது படுத்துப் புரளுவதில் ஒரு ஆனந்தம். எத்தனையோ மன்னர்களும் மகான்களும் அங்கு வந்திருப்பார்கள். அவர்கள் பாதங்கள் பட்ட இடத்தின் தூசி இவ்வுடலில் பட்டால் உள்ளத்தில் ஒரு கிறுகிறுப்பு உண்டாகும். என்னை மறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின் னோக்கிச் சென்றுவிடுவேன். கல்வெட்டுக்களைப் படிக்கும் போது அக்கல்வெட்டிற்குரிய மன்னனை நேரில் பேட்டி காண்பது போன்ற ஒரு இனிமையான நினைவு. இப்படியே வளர்ந்து வரும் இப்பழமைப் பித்தனுக்குக் குருவருள் கிட்டியது. "பழம் பொருள்கள், தொல் பொருள்கள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் ஆகியவைகளை ஆராய்ச்சி செய்து உண்மை வரலாற்றை எடுத்துச் சொல்லும் பணியில் ஈடுபடவேண்டும்" என்ற அவா மேலிட்டது. இதற்குச் சமயம் வரும்போதெல்லாம் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள் கிறேன். 1975-இல் இருந்து சுமார் 15 ஆண்டுகளாக கல்

வெட்டு ஆய்வில் ஈடுபட்டுவருகிறேன். 'அதில் மூழ்கியே விட்டேன்'. தற்போது நான் அகில இந்திய கல்வெட்டு ஆராய்ச்சிக் கழகத்தின் Epigraphical Society of India - செயற்குழுவில் ஓர் அங்கத்தினராக உள்ளேன். Place Names Society of India-வில் போஷகராகவும் உள்ளேன். இவ்விருஅகில இந்திய ஆராய்ச்சிக் கழகங்களும் எனக்கு அளித்த ஊக்கத்தால் பல நூல்களும், கட்டுரைகளும், எழுத வாய்ப்புக் கிடைத்தது.

மத்திய அரசு தொல்பொருள் கல்வெட்டுத்துறை எனக்கு அளித்த ஊக்கத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக Dr. K. V. Ramesh, Director of Epigraphy, Dr. Madav N. Katti, Chief Epigraphist, Dr. S. P. Tiwari, Dr. C. R Srinivasan — ஆகியோர் செய்த உதவிகள் பலவாகும். எனது எழுத்துக்களை ரசித்து மீண்டும் மீண்டும் பல கட்டுரைகளை எழுதத் தூண்டினார்கள். அக்கட்டுரைகள் Journal of the Epigraphical Society of India — Studies in Place Names — ஆகிய அகில இந்திய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இதுவரை 'அருளுடைச் சோழ மண்டலம்' 'The Cholas', 'Early Cholas', 'The Imprial Pandyas', 'The Medieval Pandyas' — ஆகிய நூல்களை எழுதியுள்ளேன். இவைகளில் பின்னால் கூறப்பட்ட நான்கு நூல்களும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. அகில இந்திய ஆராய்ச்சி கழகங்களின் பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ள கட்டுரைகளும் ஆங்கிலத்திலேயே வெளிவந்துள்ளன. Chola Pandyan — Chola Gankan — Chola Lankeswaran — Chola Keralan — என்னும் எனது ஆங்கில நூலை Place Names Society of India-வினர் வெளியிட்டுள்ளார்கள். நூல்களும், கட்டுரைகளும் ஆங்கிலத்தில் உள்ளதால் மற்ற மாநிலத்தவருக்கும், வெளிநாட்டவருக்கும் சோழனையும், பாண்டியனையும் பற்றி சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது. இதுவரை நான் எழுதியுள்ள நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை தமிழில் வெளிக்கொணருமாறு Dr. K. V. Ramesh, Director of Epigraphy, அவர்கள் என்னிடம் பலமுறை கூறியுள்ளார்கள் அதன் முதல் கட்டமாக இந்நூல் வெளிவருகிறது. அடுத்து பாண்டியர் வரலாறு முழுமையாக தமிழில் வெளிவரும். கல்வெட்டுக்களைப் பல கோணங்களில் ஆய்வு செய்துள்ளேன். சில நேரங்களில் கல்வெட்டுக்களைப் படிக்கும்போது அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகள், இலக்கியங்களுடன் ஒன்றாய் இணைவதைக்கண்டு பேரின்பம் அடைந்தேன். இந்நூல் எழுதுவதற்கு அவ்வாறு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. தயவுசெய்து அதனை முகவுரையில் காணுங்கள்.

கும்பகோணம்
20—9—1989

**என். சேதுராமன்**

உ ஸ்வஸ்திஸ்ரீ—பல்லவராயன்பேட்டை சாசனத்திற்கு உரிய கோவிராஜ கேசரிபன்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதி ராஜ சோழ தேவர்க்கு இந்நூலை ஸ்ரீபாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுது சந்திராதித்தவரை காணிக்கை ஆக்கினேன் உ

**குடந்தை சேதுராமனேன்**

# முகவுரை

கும்பகோணம், பேட்டை நாணயக்காரத் தெருவில் சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம் உள்ளது. இதனை ஸ்ரீ கோபு. S. சுவாமிநாத செட்டியார் அவர்கள் நிர்வகித்து வருகின்றார்கள். இங்கு பழமையான நூல்கள் பல உள்ளன. 1989 ஜூன் மாதம் 5-ஆம் தேதி திங்கட்கிழமை அங்கு சென்றேன். திரு. சுவாமிநாத செட்டியார் அவர்களின் உதவியால் 'குலோத்துங்கசோழன் கோவை' என்னும் பிரபந்த நூலைக் கண்டேன். இந்நூல் 1910-இல் வெளியிடப்பட்டது. இப்போது கிடைப்பது அரிது. இதனைப் படிக்கும் நல் வாய்ப்பை நல்கிய திரு. செட்டியார் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. இதனைப் படித்தவுடன், இக்கோவையின் பாட்டுடைத் தலைவனை அறிந்தேன். இதனைப் பற்றிக் கட்டுரை எழுதவேண்டுமென்று நினைத்தேன், ஆனால்

'சங்கரசோழன் உலா' என்ற பிரபந்தம் ஒன்று உள்ளது. இதற்கு விளக்கம் கொடுத்தால்தான் குலோத்துங்கசோழன் கோவையை விளக்க இயலும். இதனைப்பற்றி ஆங்கிலத்தில் யான் எழுதியுள்ள The Cholas, The Medieval Pandyas ஆகிய நூல்களில் விளக்கம் கொடுத்து உள்ளேன். தமிழில் விளக்கம் கொடுக்கவில்லை. எனவே, சங்கரசோழன் உலா விற்கும் தமிழில் விளக்கம் கொடுக்க நினைத்தேன், ஆனால்,

சங்கரசோழன் உலாவிற்கு விளக்கம் கொடுப்பது எனின் இராஜாதிராஜனின் 8-ஆம் யாண்டு பல்லவராயன்பேட்டை கல்வெட்டிற்கு விளக்கம் கொடுக்கவேண்டும். இதனைச் செய்ய இரண்டாம் இராஜராஜன் (*1146-73*), இரண்டாம் இராஜாதிராஜன் (*1166-82*), மூன்றாம் குலோத்துங்கன் (*1178-1218*) ஆகிய மன்னர்களின் காலத்தைக் கணக்கிட்டு வரலாற்றை வடிக்கவேண்டும். எனவே, எல்லாவற்றையும் இந்நூலில் எழுதிவிட்டேன்.

கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் இவை இணையும்போது "தேன் கடலும் திருப்பாற்கடலும் திரைபுரண்டு ஒன்றானால் எத்தன்மையதோ" அத்தன்மையைக் (குலோத்துங்கசோழன் கோவை பாடல் - 64) கண்டு, அள்ளி அள்ளிப் பருகி, மற்றவர்க்கும் கொடுக்கலாமே! அதைத்தான் இப்போது செய்கிறேன். பருகிவிட்டுச் சொல்லுங்கள் - இதன் இனிமையை மற்றவர்களுக்கு.........

கும்பகோணம்
5—8—1989

**N. சேதுராமன்**

# பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு

பல்லவராயன்பேட்டை என்னும் கிராமம் தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு வடமேற்கில் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இவ்வூரில் உள்ள மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம் இரண்டாம் இராஜராஜனது ஆட்சியில் கி. பி. 1156-இல் கட்டப்பட்டது. இதனை மன்னனது மந்திரியான திருச்சிற்றம்பலமுடையானான பெருமான் நம்பிப் பல்லவரையன் கட்டினான். கல்வெட்டுக்களில் இக்கோயில் இராஜராஜனின் பெயரால் இராஜராஜேஸ்வரம் என்றே அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் இராஜராஜனின் கல்வெட்டுக்கள் 23-உம் இரண்டாம் இராஜாதிராஜனின் கல்வெட்டுக்கள் 2-உம் கோப்பெருஞ்சிங்கனது கல்வெட்டு ஒன்றும் உள்ளன.[1] இவைகளில் இராஜாதிராஜ சோழனின் 8-ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டு முக்கியமான சரித்திர நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.[2] இனி கல்வெட்டைப் பார்ப்போம்.

1. ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார்மாதரும் பூமாதரும் கலைமாதரும் அடல் சூழ்ந்த போர்மாதரும் சீர் மாதரும் அமர்ந்து வாழ

(2) நாற்கடல்சூழ் புவியேழும் பாற்கடல்போல் புகழ் பரப்ப ஆதியுகம் ஆமென்னச் சோதிமுடி புனைந் தருளி

3. அறுசமயமும் ஐம்பூதமும் நெறியில் நின்று பாரிப்பத் தென்னவருஞ் சேரலருஞ் சிங்களரு முதலாய மன்னவர்கள் திறைசுமந்து வந்திறைஞ்சிச் சேவிப்ப ஊழி செங்கோல் ஏழுபாரும் இனிதளிப்பச் செம்பொன்

4. வீரசிம்ஹாசனத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரி பன்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதி ராஜதேவர்க்கு யாண்டு எட்டாவது

5. ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர் கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர்க் குளத்துளான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியார் ஆன பல்லவ

6. ராயர் பெரியதேவர் ராஜராஜதேவர் பத்துகோயிற் கொத்துமானை குதிரை அகம்படி நியாய முள்ளிட்ட துறைகளுக்கும் முதலிகளுமாய் முதலிகள் ஓபாதி காரியத்து

7. க்குங் கடவருமா யெல்லா வரிசைகளும் முன்னனேவல் உள்ளிட்டு முதலிகள் பெறக் கடவ ஏற்றங் களும் பெற்று நின்று பெரியதேவர் துஞ்சி அருளிப் பிள்ளைகளுக்கு ஒன்றும் இரண்டும் திருநக்ஷத்திரமா

8. கையால் ஆயிரத்தளிப் படைவீடும் விட்டுப் போத வேண்டிப் போதுகிற இடத்துத் திருவந்தப்புரமும்... ஆரங்களும் உள்ளி(ட்)டன எல்லாம் பரிகரித்துக் (கூட்டி)க் கொடுபோந்து ராஜ

9. (ரா)ஜபுர(த்)திலே இருந்த இட(த்துக்கு) (சூழ்ந்த) இடந்...யாறு மிகுதி...(ர)த்து உடன் கூட்டத்...(ர) ... ... ... (ரா)லும் எல்லாக் (கலக்க) ... (சோழ ராஜ்யத்துக்கு ... ... ... ... யே (இருப்பார்) காரண வருட ...

10. வேண்டிப்புறத்து எல்லா அடைவு கேடுகளும் வ(ராத) இடத்து இந்...ளும் பரிகரித்து இவ்(வித மாகப்) பெரியதேவர் எழுந்தரு(ளி) (இருக்கிற) நாளிலே திருஅபி(ஷேகத்துக்)கு உரிய பிள்ளைகள் இன்றியே (இருக்கி)

11. றபடியை பார்த்து முன்னாளிலே காரியம் இருந்தபடி வி(சாரணை செ)ய்து கங்கைகொ(ண்)ட சோழபு(ரம் எழுந்)தருளி இரு(க்)கிற பிள்ளைகளை(யும் பிர) யாணம் பண்ணு(வித்துஉ)டையார் விக்கிரமசோழ தேவர் பேரனார்



12. நெறியுடைப் பெருமா திருமகனுர் எதிரிலிப் பெருமாளைப் பெரி( ) ( )சி அருளின நாளிலே மண்டைக்கவிபிபித் ( )தாரானவாறே இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக( )த்து நாலாந் திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ

13. ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும் நாடும் ஒன்றுபட்டுச் செல்லும்படி பண்ணி (வித்து அருளி)னார்... என்பது இச்சாசன வாசகம்.

இதற்குமேல் 14-ஆம் வரி முதல் 30-ஆம் வரி முடிய உள்ள சாசன வாக்கியங்கள் இங்கு கொடுக்கப்படவில்லை. அப்பகுதியில் கூறப்படும் செய்திகளாவன:

1. பெருமான்நம்பிப் பல்லவரையன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வந்த சிங்களவர்களை வென்றான். சிங்களப் படைத் தலைவர்களான லங்காபுரி தண்டநாயக்கன் உள்ளிட்டாரைக் கொன்று அவர்கள் தலைகளை மதுரைக் கோட்டை வாசலில் தைப்பித்தான். குலசேகர பாண்டியனை மதுரையில் அரியணை ஏற்றினான்,
2. பிறகு பல்லவரையன் வியாதிபட்டு இறந்தான்.
3. இராஜாதிராஜன், பல்லவரையனின் பணிகளைப் பாராட்டி இவனது குடும்பத்தாருக்கு 40 வேலி நிலங்களைக் காணியாகப் பகிர்ந்து கொடுத்தான் என்பனவாகும்.

கல்வெட்டில் இரண்டாம் இராஜராஜனும், இரண்டாம் இராஜாதி இராஜனும் மந்திரி பெருமான் நம்பிப் பல்லவரையனும் குறிப்பிடப்படுகின்றனர். எனவே, சாசனத்திற்கு விளக்கம் கொடுப்பதற்கு முன்பாக இரண்டு மன்னர்களின் காலத்தை வரையறுத்து, பெருமான் நம்பி எப்போது இறந்தான் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்:

இராஜராஜன் கி. பி. 1146 ஆனி அல்லது ஆடி மாதம் முடி சூடினான்.[3] இவனது மெய்க்கீர்த்தி பூமருவிய


திருமாதும் அல்லது பூமருவிய பொழில் ஏழும் என்று துடங்கும். இவனது கல்வெட்டுக்கள் 18-ஆம் ஆட்சிக்கு (கி. பி. 1163-64) மேல் கிடைக்கவில்லை என்று சிலர் நினைத்தனர்.[4] இராஜராஜன் கி. பி. 1173 வரை அரசாண்டான் என்று பல கல்வெட்டுக்களால் அறியலாம். இக்கல்வெட்டுக்களின் விளக்கங்களை அடியேனது 'சோழர்கள்' (ஆங்கிலம்), 'இடைக்காலப் பாண்டியர்' (ஆங்கிலம்) ஆகிய நூல்களில் காணலாம். எனினும் இந் நூலைப் படிப்பவர்களை முன்னிட்டு அப்பட்டியலை அடுத்த பக்கத்தில் கொடுத்துள்ளேன். திருவொற்றியூர்க் கல்வெட்டு 27-ஆம் ஆட்சிக்குரியது. இதன் காலம் 1173 ஆகும். ஆந்திரத்தில் உள்ள கொனிதேனா கல்வெட்டு 28-ஆம் ஆட்சிக்கு உரியதாகும். இதற்கு மேல் இவனது கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை. எனவே, இராஜ ராஜன் கி. பி. 1173 ஆனி அல்லது ஆடி மாதத்திற்குப் பின் மறைந்தான் எனக் கொள்ளலாம். அதாவது இராஜ ராஜன் 1146 முதல் 1173 வரை ஆட்சி புரிந்தான் என்பதே சாசன ஆராய்ச்சிக்கு உரிய முதல் அஸ்திவாரமாகும்.

இரண்டாம் இராஜாதிராஜனின் மெய்க்கீர்த்தி கடல் சூழ்ந்த பார்மாதரும் என்று துடங்கும். இம்மன்னன் கி. பி. 1163-இல் முடி சூடினான் என்று கீல்ஹார்ன் 1906-இல் கணித்தார். ஆனால் அவருக்கே இத் தியதியில் சந்தேகமாயிருந்தது. "ஊகத்தின் பேரில் அநேமாக இருக்கலாம் என அனுமானித்து 1163-ஐக் குறிப்பிட்டுள்ளேன். ஆனாலும் எனக்கு சமாதானம் ஏற்படவில்லை. பிற்காலக் கண்டுபிடிப்புகளைப் பார்க்க வேண்டும்" என்றார்.[5] கீல்ஹார்ன் தனது கணக்கீட்டினைப் பிரசுரிக்கவில்லை. புதிய கல்வெட்டுக்களை எதிர்பார்த்தார். 1907-இல் கீல்ஹார்ன் காலமானர். ஆனால் அவரது எச்சரிக்கையையும் கவனியாது அவர் பிரசுரிக்காது வைத்திருந்த கட்டுரையை 1908-இல் பிரசுரித்து இராஜாதி ராஜன் கி. பி. 1163-இல் முடி சூடினான் என்று கொண்டனர்.[6] பிற்காலத்தில் கண்டு


## இரண்டாம் இராஜராஜன்

| சாசன எண் | ஊர் | ஆட்சியாண்டு | காலம் |
|---|---|---|---|
| 434 / 1921 | திருவெண்ணெய்நல்லூர் | 19, துலா, வளர்பிறை ஷஷ்டி, அவிட்டம், ஞாயிறு | 25—10—1164 |
| 86 / 1928 | திருப்புகலூர் | 19, கும்பம், தேய்பிறைத்துதியை, ஹஸ்தம், திங்கள் | 1— 2—1165 |
| 411 / 1909 | சித்தலிங்கமடம் | 19 | 1165 |
| 151 / 1926 | திருவிளக்குடி | 19 | 1165 |
| Pd. 137 | பொன்னமராவதி | 19 | 1165 |
| 221 / 1929 | திருவதத்துறை | 19 | 1165 |
| 195 / 1908 | கோவிலூர் | 20, மகரம், வளர்பிறை ஸப்தமி, அஸ்வதி, திங்கள் | 10— 1—1166 |
| S. I. I. IV 1050 | திராக்ஷாராமா | 20 | 1166 |
| S. I. I. IV 1051 | திராக்ஷாராமா | 20 | 1166 |
| 132 / 1927 | பெண்முஜி | 20 | 1166 |
| 304 / 1921 | அரசர் கோயில் | 21, சிம்மம், வளர்பிறை, ஹஸ்தம், திங்கள் | 1— 6—1166 |
| 196 / 1908 | கோவிலூர் | 21 | 1167 |

| சாசன எண் | ஊர் | ஆட்சியாண்டு | காலம் |
|---|---|---|---|
| 17 / 1908 | தாராசுரம் | 21 | 1167 |
| 708 / 1920 | கொல்லூரு | 21 | 1167 |
| 0.59 | நெல்லூர் கொண்டமன்சரலு | 21 | 1167 |
| 213 / 1929 | திருவதத்துறை | 22, தனுர், தேய்பிறை சப்தமி, பூரம், திங்கள் | 4—12—1167 |
| C. P. 23 / 1917 | நந்தாந செப்பேடு | 23 (சகம் 1091) | 1169 |
| 121 / 1941 | திருவிளம்புதூர் | 24, கர்க்கடகம், 4ஆம் தேதி, ஞாயிறு | 29—6—1169 |
| 695 / 1920 | பெத்தகொண்டூரு | 24 | 1170 |
| 704 / 1920 | கொல்லூரு | 26 | 1172 |
| 495 / 1904 | வேதாரண்யம் | 27, மகரம், பௌர்ணமி, பூசம், திங்கள் | 1—1—1173 |
| 389 / 1940 | உய்யக்கொண்டான் திருமலை | 27, ரிஷபம், தேய்பிறை ஏகாதசி, ரேவதி, புதன் | 9—5—1173 |
| 123 / 1912 | திருவொற்றியூர் | 27 | 1173 |
| 181 / 1899 | கொனிதேனா | 28, (சகம் 1095) | 1173 ஆனி ஆடிக்குப் பின் |



பள்ளிராயன்பேட்டைக் கல்வெட்டு



பிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் கி. பி. 1166-இல் முடி சூடினான் என்பதை உறுதி செய்கின்றன. எனவே, காலஞ்சென்ற கீல்ஹார்னின் கணிப்பை பின்பற்றும் ஒரே நோக்கத்துடன் - கி. பி. 1166 - ஐ துடக்க ஆண்டாகக் காட்டும் கல்வெட்டுக்களின் ஆட்சி ஆண்டுகளைத் திருத்தினர். இது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. கீல்ஹார்ன் ஆய்ந்த கல்வெட்டுக்களும், மற்றும் 27 கல் வெட்டுக்களும் இராஜாதிராஜன் கி. பி. 1166 ஆடி மாதம் முடி சூடினான் என்பதை உறுதி செய்கின்றன. இதனை அடியேனது *The Medieval Pandyas* என்னும் நூலில் காணலாம். இந்நூலின் கடைசியில் பிறசேர்க்கை யிலும் கொடுத்துள்ளேன். இக்கல்வெட்டுக்கள் கீல்ஹார் னுக்குக் கிடைத்திருந்தால் அவரும் 1166-ஐ இராஜாதி ராஜனின் துடக்க ஆண்டாகக் கொண்டிருப்பார்.

இராஜாதிராஜனது கல்வெட்டுக்கள் 16ஆம் ஆட்சி ஆண்டு வரை கிடைப்பதால், 1182 வரை தமிழகத்தில் இருந்தான் எனக் கொள்ளலாம்.[7] 1182 முதல் 1216 வரை இவனது கல்வெட்டுக்கள் ஆந்திரத்தில் கிடைக் கின்றன. இதனால் இராஜாதி ராஜன் தமிழ் நாட்டில் 1166 முதல் 1182 வரை ஆண்டான்; பிறகு ஆந்திரம் சென்று 1216-இல் மறைந்தான் எனக் கொள்ளலாம்

பல்லவராயன்பேட்டை சாசனம் இராஜாதி ராஜனின் 8-ஆம் ஆண்டு 1174-க்கு உரியது. அப்போது இராஜ ராஜன் உயிருடன் இல்லை. இதனை வரி 7இல் பெரிய தேவர் துஞ்சி அருளி என்று கூறுகிறது. அதாவது காலஞ் சென்ற இராஜராஜன் என்பதை உணர்த்துகின்றது. பல்லவராயன் பேட்டை சாசனத்தில் இராஜராஜனின் மறைவிற்குப் பின் மந்திரி பல்லவரையன் இறந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது. இராஜராஜன் 1173 ஆனி ஆடி மாதத்திற்குப் பிறகு மறைந்தான் என்பதை முன்னமே கண்டோம். திருவலஞ்சுழியிலுள்ள இராஜாதி ராஜனின் 8-ஆம் ஆண்டின் சாசனத்தில் சிம்ம மாதம்,

தேய்பிறைத் துவாதசி புனர்வசு, திங்கட்கிழமை ஆகிய வானிலைக் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[8] இதன் காலம் 1173 ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தியதி ஆகும். இதில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர் கோட்டத்து சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூர் குளத்துளான் திருச்சிற்றம்பலமுடையானான பெருமான் நம்பிப் பல்லவ ரையனின் உறவினன், அளித்த நிவந்தம் சொல்லப்படு வதால் - பெருமான் நம்பிப் பல்லவரையன் இத்தியதிக்குப் பிறகு இறந்தான் எனக் கொள்ளலாம். தொகுத்து நோக்கினால்,

1. இரண்டாம் இராஜராஜன் 1146-லிருந்து 1173 சூலை மாதம் வரை அரசு புரிந்து பின் இறந்தான். சில மாதங்களுக்குப் பிறகு பெருமான் நம்பிப் பல்ல வரையனும் இறந்தான்.
2. இராஜாதி ராஜன் 1166 முதல் 1182 வரை தமிழ் நாட்டில் அரசு புரிந்து - பிறகு ஆந்திரம் சென்று 1216 வரை ஆந்திரந்தில் வாழ்ந்தான்.[9]
3. இக்காலக் கணக்கீடுகளால் இராஜராஜனே இராஜாதிராஜனுக்கு 1166-இல் முடிசூட்டி வைத் தான் என்பதை அறியலாம். இதனை சாசனத்தின் வரிகள் 12, 13 உறுதி செய்கின்றன.

இராஜராஜனின் மக்களுக்கு ஒரு வயதும், இரு வயதும் (திருநக்ஷத்திரம்) இருக்கும் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன எனச் சாசனம் கூறுகிறது. அரசனின் பிள்ளைகளைப் பல்லவரையன் இராஜராஜ புரத்து அரண்மனையில் பாதுகாப்பாக வளர்த்தான். அமைதி நிலவும் காலத்தில் இராஜராஜன் நோய்வாய்ப் பட்டான். தன்னுடைய மகன்கள் சிறுவர்களாக இருப்ப தால் திருஅபிஷேகத்திற்கு (முடிசூடுவதற்கு) உரியவர் களாக இல்லையே என்று எண்ணி மந்திரி பல்லவரைய னிடம் ஆலோசனை கேட்டான். பல்லவரையன் கூறிய படி முன்னாளில் இருந்தபடி செயல்படத் துடங்கினன். அதாவது, அக்காலத்தில் வீரராஜேந்திர சோழன் (1070)



நோய்வாய்ப்பட்டிருந்தான். அவனது மகனான அதி ராஜேந்திரனும் நோய்வாய்ப்பட்டான். அவனுக்கும் வாரிசு இல்லை. எனவே, முன் எச்சரிக்கையாக வீரராஜேந்திரன் தனது சகோதரியின் மகனான குலோத்துங்கனுக்கு முடி சூட்டி வைத்தான். வீரராஜேந்திரனின் மறைவிற்குப் பிறகு, அதிராஜேந்திரனும் வாரிசு இன்றி இறந்தான். முன்னமேயே முடி சூடப்பட்டு இருந்த குலோத்துங்க சோழன் மாமன்னன் ஆனான். குலோத்துங்கன்-இராஜ ராஜனின் கொள்ளுப்பாட்டன் ஆவான். எனவே, இராஜ ராஜனும் மூதாதையர் வழியைப் பின்பற்றினான். கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்த பிள்ளைகளை வரவழைத்து விக்கிரம சோழனின் (கொள்ளுப்) பேரனும், தனது சகோதரி நெறியுடைப் பெருமாவின் மகனுமான எதிரிலிப் பெருமாளுக்கு முடி சூட்டி இராஜாதிராஜ சோழன் என்று அபிஷேக நாமத்தை அளித்தான். இந்நிகழ்ச்சி 1166-இல் நடந்தது. இராஜராஜனும், இராஜாதிராஜனும் ஏழு ஆண்டுகள் இணைந்து ஆண்டனர்.

1173 முதல் இராஜாதி ராஜன் சோழ மாமன்னன் ஆனான். அப்பொழுது இராஜராஜனின் இரு மக்களும் இளம் வயதினராக இருந்தனர். மூன்றும் குலோத் துங்கன் 1178 முதல் 1218 வரை அரசு புரிந்தவன்.[10] குலோத்துங்கனும் இராஜாதி ராஜனும் நான்கு ஆண்டுகள் இணைந்து 1182 வரை அரசு புரிந்துள் ளனர். பிறகு இராஜாதி ராஜன் சோழ சாம்ராஜ்யத்தை குலோத்துங்கனிடம் ஒப்படைத்தான். இதனைத் திருச் சத்திமுற்றத்திலிருந்து கிடைக்கும் இராஜாதி ராஜனின் கல்வெட்டு உறுதி செய்கிறது. கல்வெட்டு கூறும் செய்தியைப் பார்ப்போம்; கோயிலுக்கு விளக்கு எரிக்க நெய் அளப்பதாக ஒப்புக்கொண்ட இடையர்கள் சரியாக அளக்கவில்லை. எனவே இடையர்கள் ஒழுங்காக அளக்க இராஜாதி ராஜன் ஏற்பாடு செய்தான். இதனைக் கூறும்போது இனி குலோத்துங்க சோழனது ஆட்சியால் கணக்கிட்டுச் செலுத்தவும் -என்று உத்தரவிடுகிறான். கல் வெட்டின் முக்கிய வாசகங்கள் வருமாறு: (270/1927)

வரி 1 - ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு.......... நாயறும் பூர்வபக்ஷத்து ஷஷ்டியும் சனிக்கிழமை யும் பெற்ற சோதிநாள்

வரி 9 - இவ்விடையர் கைக்கொண்ட ஆட்டுக்குத் திரு நொந்தா விளக்கு எரிக்க நெய் அளவாமையால் திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ........ பூர்வபக்ஷத்து துவாதசியும் திங்கள் ........ சதயத்து நாள் இக் கோயில் சிவப்பிராமணர் இத்திருநொந்தா விளக்கு ஒன்றினுக்கு நெய் உழக்காக நெய் உரியும் சந்திராதித்தவரை எரிக்கக் கடவதாக.

இரு மன்னர்களுக்கும் உரிய ஆட்சி ஆண்டுகள் உள்ள இடங்கள் கல்வெட்டில் சிதைந்துள்ளன. அதனால் என்ன? திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜ தேவர் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவரின் ஆட்சியை உறுதி செய் கின்றாரே! இருவரும் இணைந்து ஆட்சி புரிந்தனர் என்று நிலைநாட்ட இது போதுமே!

இராஜாதி ராஜன் கங்கைகொண்ட சோழபுரத்தி லிருந்து வரவழைக்கப்பட்ட பிள்ளைகளில் ஒருவன். திருமணம் ஆனால்தான் முடி சூடலாம். இராஜாதி ராஜனின் கல்வெட்டுக்களில் உள்ள மெய்க்கீர்த்திகள் திருமணம் ஆன பின்பே இராஜாதிராஜன் முடி சூடினான் என்று கூறுகின்றன.[11] ஒரு பிள்ளைக்கு முடி சூடும் வயது 14 ஆகும். எனவே, இராஜாதிராஜன் 14 வயதில் முடி சூடினான் எனக் கொள்ளலாம். இதனைக் கூறும் சாசனத்தின் வரிகள் 12, 13-இல்

திருஅபிஷேகம் பண்ணுவிக்கக்
கடவராக ( )த்து நாலாம் திருநக்ஷத்
திரத்திலே ராஜாதி ராஜதேவர்
என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து..........



எனக் கூறப்பட்டுள்ளது. திருநக்ஷத்திரம் என்ற சொல் லுக்கு வயது எனப் பொருள். இதனை சாசனத்தின் 7-வது வரி உறுதி செய்கிறது. இலங்கை அரசன் விஜய பாகு 55-வது யாண்டு அரசு புரியும்போது அவனுடைய திருநக்ஷத்திரம் 73 (வயது) என இலங்கைக் கல்வெட்டு கூறுகிறது.[12] எனவே முடி சூட்டப்படும் காலத்தில் இராஜாதிராஜனுக்கு உரிய வயதை வரி 12 கூறுகிறது. துரதிர்ஷ்டவசமாக இவ்விடம் சிதைந்து உள்ளதால் (ப்ப)த்து நாலு எனக் கொண்டு அதற்கு விளக்கமும் தந் துள்ளேன். ஒருவேளை இது இருபத்து நாலு அல்லது முப்பத்து நாலாகவும் இருக்கலாம். எப்படி இருந்தால் என்ன? இராஜாதி ராஜன் ( )4-ஆம் வயதில் முடி சூடினான் எனக் கூறுவதே சரியான முறையாகும். அது 14, 24, 34 இவற்றில் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும்.

பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு இராஜாதி ராஜனின் 8-ஆம் ஆண்டு 1174-க்கு உரியது. தான் முடி சூடிய (1166) காலத்திற்குப் பல ஆண்டுகளுக்கு முன் மன்னனின் பிள்ளைகள் ஒரு வயதும் இரு வயதும் உடையவர்களாக இருந்தார்கள் என இராஜாதி ராஜன் கூறுகிறான். அப்படியானால் இக்கல்வெட்டை வெட்டிய 1174-இல் அவ்விரு புதல்வர்களும் இளம் வயதினர் களாக அல்லவா இருக்க வேண்டும்? இல்லாவிடில் காலஞ்சென்ற மாமன்னனின் மக்களைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லையே? மாமன்னன் இராஜ ராஜன் 1173-இல் இறந்தான். அடுத்த ஆண்டில் அவ்விரு அரச குமாரர்களைப் பற்றிக் கூறினால் அவர்கள் என்ன ஆனார்கள் எனச் சோழநாட்டு மக்கள் கேட்பார் களே! "ஆம் — அவ்விருவரும் இளஞ் சிங்கங்களாக உள்ளார்கள். **அவர்களுக்கு மெய்த்துணையாய்த் தோற்றுவிக்கப்பட்ட பாதுகாவலனாக உள்ளேன்.** உரிய காலம் வந்தவுடன் அவர்களிடம் சோழ சாம்ராஜ் யத்தை ஒப்படைப்பேன்" எனத் துணிந்து சொல்லக் கூடிய நிலையில் இராஜாதி ராஜன் இருந்தான் என்

பதைக் கல்வெட்டு சொல்லாமல் சொல்கிறது. நான்கு ஆண்டுகள் கழித்து 1178-இல் மூன்றாம் குலோத்துங்கனுக்கு முடி சூட்டி வைப்பதால் குலோத்துங்கன் காலஞ்சென்ற இராஜராஜனுடைய மகன் என்பதை அறியலாம். இதனைக் 'குலோத்துங்க சோழன் கோவை'யும் உறுதி செய்கிறது.

தான் முடி சூடுவதற்கு 1166-க்கு முன் மாமன்னனுடைய இரு புதல்வர்களும் ஒரு வயதும் இரு வயதும் உடையவர்களாக இருந்தார்கள் என்று இளையவனை முன் மொழிந்து மூத்தவனைப் பின் மொழிகின்றான் இராஜாதி ராஜன். இதனை 1174-இல் கூறிவிட்டு 1178-இல் குலோத்துங்கனுக்கு முடி சூட்டுகிறான். எனவே, குலோத்துங்கன் காலஞ்சென்ற இராஜராஜனின் இரண்டாவது மகன் என்பதை அறியலாம்.[14] இதனை 'சங்கர சோழனுலா' உறுதி செய்கிறது. மூத்தோன் என்ன ஆனான்? அவன் மொழி அனைத்தும் வல்லமனாகி, ஆதி மனுவிற்கும் மேதக்க நல்லமன் என்ற நாயகனாகி அரசு கோலோச்சுவதில் பற்று இல்லாமல் பேரறிஞனாக விளங்கினான் என்று 'சங்கர சோழனுலா' கூறுகிறது. இவ்வுண்மைகளை 'சங்கர சோழனுலா'வில் பார்ப்போம்.

## பழைய விளக்கம்

பழைய விளக்கத்தைக் கூறி, அதில் உள்ள சிக்கல்களைப் பற்றி எழுதுவதென்றால், ஒரு புத்தகமே எழுத வேண்டும். இங்கு இடமின்மையால் சுருக்கமாக எழுதுகிறேன். (விளக்கமான ஆய்வை அடியேன் எழுதியுள்ள 'அருளுடைச் சோழ மண்டலம்' - *'The Cholas Mathematics Reconstructs the Chronology'* - *'The Medieval Pandyas'* ஆகிய நூல்களில் காணலாம்.)

பல்லவராயன் பேட்டை சாசனம் 1924-இல் கண்டு பிடிக்கப்பட்டு சாசன எண் 433 ஆக சிறு குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. 1932 எபிகிராபியா இண்டிகா



தொகுதி 21-இல் இச்சாசனம் முழுமையாக வெளியிடப்பட்டு, வெங்கடசுப்பா அய்யரால் ஆராயப்பட்டுள்ளது. 1956-இல் எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல் நீலகண்ட சாஸ்திரியாரும் *T. N.* சுப்பிரமணியம் அவர்களும் ஆய்ந்துள்ளார்கள். சாசனம் வெட்டப்பட்டுள்ள சுவரில் வரி 12 எவ்வாறு உள்ளது என்பதைப் பார்ப்போம்.

வரி 12: நெறியுடைப் பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரி( ) ( )சி அருளின நாளிலே மண்டைகவிபிபித்( )தாரானவாறே இவரைத் திரு அபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக ( )த்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே இராஜாதி ராஜ தேவர் என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து.......

நான்கு இடங்கள் சிதைந்து உள்ளன. இவ்விடங்கள் ஒவ்வொன்றும் 8 அல்லது 15 சென்டி மீட்டர் அளவு இருக்கும். சிறிய இடங்களில் புகுத்த முடியாத எழுத்துக்களைப் புகுத்திக் கீழ்க்கண்டவாறு படிக்கலாம் என்றனர்.

**ஆய்வாளர்கள் ஊகித்த வரி 12:** நெறியுடைப் பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரி(ய தேவர்) (துஞ்)சி அருளின நாளிலே மண்டைக்க கவிப் பிபித்(துப்போந்)தாரானவாறே இவரைத் திரு அபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக (நிச்சயி)த்து நாலாம் திருநக்ஷத்திரத்திலே இராஜாதி ராஜ தேவர் என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து........

இராஜர்ராஜன் 1163-இல் இறந்தான். இறப்பதற்கு முன் எதிரிலிப் பெருமாளை அடுத்த அரசனாகத் தேர்ந்து எடுத்துப் போந்தான். அதன்படி நான்கு ஆண்டுகள் கழித்து 1166-இல் இராஜாதிராஜ சோழ தேவர் எனத் திரு அபிஷேகம் செய்தனர் என விளக்கம் கொண்டார்கள். இதில் உள்ள சிக்கல்களைப் பார்ப்போம்.

1. இராஜராஜனின் கல்வெட்டுக்கள் 1173 வரை கிடைக்கின்றன. எனவே, 1163-இல் இறந்தான் எனக்

கொள்ளமுடியுமா? இதற்கு எப்படிப் பதில் சொல்வது? அரசன் இறந்தது தெரியாமல் அதிகாரிகள் பத்து ஆண்டுகள் இராஜராஜனின் பெயரில் கல்வெட்டுக்களை வெட்டினார்கள் என்றார்கள்.[15] இது ஏற்கக் கூடியது அல்ல.


2. 1163-இல் தேர்ந்து எடுத்து 1166-இல் இராஜாதிராஜன் என்று திருஅபிஷேகம் செய்யும்வரை சோழநாட்டு சிம்மாதனம் காலியாக இருந்ததா? கீல் ஹார்னின் கணக்கை மறுபரிசீலனை செய்யாது ஊகத்தின் அடிப்படையில் சிதைந்த இடங்களில் புகுத்த முடியாத எழுத்துக்களைப் புகுத்தியதால் இந்த சிக்கல் ஏற்பட்டது.

3. இராஜாதிராஜன் முடி சூடியது 1163 என்று கொள்வதா அல்லது 1166 எனக் கொள்வதா? இக் கேள்விக்குப் பதில் கூறும் வகையில் 1166-ஐச் சுட்டும் கல்வெட்டுக்களில் ஆட்சி ஆண்டுகளைத் திருத்தினர்.[16] இதனை ஏற்க முடியாது.

4. இராஜாதிராஜன் தனது கல்வெட்டுக்கள் சில வற்றில் 1163-இலிருந்தும், சிலவற்றில் 1166-இலிருந்தும் கணக்கிடுகிறான் என்று சாஸ்திரியாரும் சுப்பிரமணியம் அவர்களும் கூறினார்கள்.[17] இதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஒரு அரசனுக்கு ஆட்சியின் துடக்க ஆண்டு ஒன்றுதான் இருக்கமுடியும்.

5. பல்லவராயன்பேட்டை கல்வெட்டின் ஆய்வுக்கு அஸ்திவாரங்கள் எவை? இராஜராஜன் 1146 முதல் 1173 வரை அரசாண்டான். 1166-இல் இராஜாதிராஜனுக்கு முடி சூட்டினான். இந்தக் காலக் கணக்கீடுகளுக்குக் குந்தகமில்லாத வகையில் கல்வெட்டின் இடைவெளியை நிரப்பலாம். இதற்காக அடியேன் அளித்துள்ள புதிய வாசகம் வருமாறு:

வரி 12: நெறியுடைப் பெருமா திருமகனார் எதிரிலிப் பெருமாளைப் பெரி(யதே)(வரா)சி அருளின நாளிலே மண்டைக் கவிப்பிபித்(தளித்)தாரானவாறே



தாராசுரம் கோயில்



பல்லவராயன்பேட்டை கோயில்

இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக (ப்ப)த்து நாலாந் திருநக்ஷத்திரத்திலே இராஜாதி ராஜ தேவர் என்று திரு அபிஷேகம் பண்ணுவித்து.............

மேற்கண்டவாறு படித்தால் மற்ற கல்வெட்டுக்கள், வானசாத்திரக் காலக் கணக்கீடுகள் முதலியவற்றிற்கு ஒத்து வருகின்றது. நிற்க, சிதைந்த இடங்களை நிரப்பா விட்டாலும் ஒன்றும் கெட்டுவிடாது; இராஜராஜன் 1166-இல் இராஜாதிராஜனுக்கு ( ) 4 வயதில் முடி சூட்டி ஏழு ஆண்டுகளுக்குப் பின் மறைந்தான் என்னும் உண்மைக்கு எந்த குந்தகமும் ஏற்படாது. சிதைந்த இடங் களை நிரப்பாமல் மற்ற கல்வெட்டுக்களின் துணைக் கொண்டு சரித்திரத்தை எழுத முடியும்.

வரி 11-இல் முன்னாளில் காரியம் இருந்தபடி என்று வருகின்ற தொடருக்கு விளக்கமும் கொடுத்தனர். "அக் காலத்தில் வீரராஜேந்திரன் தன் சகோதரியின் மகனாகிய முதல் குலோத்துங்கனுக்கு முடிசூட்டினான். அதுபோல இராஜராஜனும் தனது சகோதரியின் மகனாகிய இராஜாதி ராஜனுக்கு முடிசூட்டினான் என்று கொள்ளலாம். ஆனால் முதல் குலோத்துங்கன் சோழ சிம்மாதனத்தைக்கைப்பற்றி யவன்" என்று சாஸ்திரியார் கூறினார்.[18] முன்னாளில் காரியம் இருந்தபடி நிச்சயிப்பவன் இராஜராஜன் ஆவான். தனது கொள்ளுப்பாட்டன் முதல் குலோத்துங்கன் அரியணையைக் கைப்பற்றியவன் என்று இன்றைய ஆய்வாளர்கள் கூறுவதை அன்றைய இராஜராஜன் ஏற்பானா? இதெல்லாம் விதண்டாவாதங்கள். முதல் குலோத்துங்கன் வீரராஜேந்திரனால் முடிசூட்டப் பட்டவன் என்று கலிங்கத்துப்பரணி உறுதி செய்கிறது. அவன் உரிமையில் சோழ அரியணை ஏறினான் என்று மெய்க்கீர்த்திகளும் உறுதி செய்கின்றன.

6. "இரண்டாம் குலோத்துங்கன் விக்கிரம சோழ னுடைய மகன் அல்ல; விக்கிர சோழனின் மகளான நெறியுடைப் பெருமாளின் மகனே இரண்டாம் குலோத்

துங்கன் ஆவான். விக்கிரமன் தனது பேரனான இரண்டாம் குலோத்துங்கனை சுவீகாரம் செய்துகொண்டான். அதுபோலவே இராஜராஜனும் இராஜாதிராஜனை சுவீகாரம் செய்துகொண்டான்" என சாஸ்திரியாரும் சுப்ரமணியமும் கூறினார்கள். 'குலோத்துங்க சோழன் உலா' இராஜராஜ சோழன் உலா', 'தக்கயாகப் பரணி' ஆகிய இலக்கியங்கள் விக்கிரமனின் மகன் இரண்டாம் குலோத்துங்கன் எனக் கூறுகின்றன. இவ்வுண்மையை மறைத்து விக்கிரமனின் பெண் வயிற்றுப் பேரன் இரண்டாம் குலோத்துங்கன் எனக் கூறலாமா? இம்மாதிரி முரண்பாடான கருத்துக்களை சாஸ்திரியாரும், சுப்பிரமணியமும் எபிகிராபியா இண்டிகா தொகுதி 31-இல் கட்டுரை 31-இல் எழுதியுள்ளனர். இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் சாஸ்திரியார் தனது 'சோழர் வரலாறு' நூல்; 1975 பதிப்பு; பக்கம் 357-இல் மேற்கண்ட கருத்தை சுப்பிரமணியம் கூறியதாக எழுதியுள்ளார்கள்.

## 1163 - எப்படி வந்தது?


மாதம், திதி, நக்ஷத்திரம், கிழமை கொடுத்தால் ஒரு நூற்றாண்டில் 3 அல்லது 4 நாட்கள் வரும். கீல்ஹார்ன் 5 கல்வெட்டுக்களை ஆராய்ந்தார். அவற்றில் ஒன்றின் குறிப்புக்கள் தவறானவை. அவரே கூறியுள்ளார். மற்ற நான்கில், ஒரு கல்வெட்டில் நக்ஷத்திரம் மறுநாள் வருகிறது. எனவே, கீல்ஹார்ன் சமாதானப்படவில்லை. பிற்காலக் கண்டுபிடிப்புகளை எதிர்நோக்கியிருந்தார். சக வருடம், ஹேவிளம்பி வருடம் கூறும் கல்வெட்டுக்கள் 1166-ஐத் துடக்க ஆண்டாகச் சுட்டுகின்றன.[19] இதன் அடிப்படையில் கீல்ஹார்ன் ஆய்ந்த கல்வெட்டுக்களையும் நோக்கினால் அவையும் 1166-யே சுட்டுகின்றன.[20] இவ்வாறு செய்யாமல் கீல்ஹார்ன் கூறிவிட்டார். அதுவே வேதவாக்கு எனக்கொண்டு ஆட்சி ஆண்டுகளைத் திருத்தினார்கள். இன்று கீல்ஹார்ன் உயிருடனிருந்தால் 1166-யே துடக்க ஆண்டாகக் கொள்வார் என்பது உறுதி.



### சிக்கலுக்கான காரணங்கள்

அடிப்படை வானசாத்திரக் காலக் கணக்கீட்டு ஆய்வில் கீல்ஹார்னின் எச்சரிக்கைப்படி அவரது கணிப்பை மீண்டும் பரிசீலனை செய்யாதது; இராஜாதிராஜன் முடி சூடியது 1166 என்ற கணிப்பை ஏற்காதது. 1166-ஐக் குறிக்கும் கல்வெட்டுக்களின் ஆட்சி ஆண்டுகளைத் திருத்தியது; இராஜராஜன் 1173 வரை வாழ்ந்தான் என்பதை ஏற்காதது; கல்வெட்டில் சிதையுண்ட இடங்களில் புகுத்தமுடியாத எழுத்துக்களைப் புகுத்தியது. இன்னும் நிறைய எழுதலாம். இதற்குமேல் தேவையில்லை. விரிவான ஆய்வை அறியவேண்டில் அடியேன் எழுதியுள்ள 'அருளுடைச் சோழமண்டலம்', - *'The Cholas Mathematics Reconstructs the Chronology'* - *'The Medieval Pandyas'* ஆகிய நூல்களில் காணலாம்.) இங்கே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். புதுக்கோட்டை குடுமியான் மலை சாசனம் *Pd.* 221-ஐ படியுங்கள். 1218-இல், கல்வெட்டு ஆய்வாளன் ஒருவன் பழைய கல்வெட்டை படியெடுத்து எழுதும் போது, வரி இரண்டில் இருபது எழுத்து தெரியாது என்றும் வரி நான்கில் ஏழு எழுத்து தெரியாது என்றும் கூறினான். அவனைப் பின்பற்றுவோம்.

### வம்சாவளி



## FOOT NOTES

1. A. R. Ep. 1924 and 1925 - Pallavarayan Pettai inscrptions
2. 433/1924 Rajadhi Raja II year 8 ; Ep. Indica 21 page 184
3. N. Sethuraman - The Cholas Mathematics Reconstructs the Chronology Page 15 ; Kielhorn E. I. IX page 219
4. Pandarathar - *சோழர் வரலாறு* - Annamalai University
5. E. I. VIII page 261 - para 1
6. E. I. IX pages 211 to 213
7. Varancharam
8. S. I. I. VIII - 227
9. N. Sethuraman - Medieval Pandyas - page 34
10. N. Sethuraman - The Cholas - "The Medieval Pandyas" "The Hoysalas in Pandimandalam" *paper presented in* the 15th annual congress of the Epigraphical Society of India held at Anantapur in November 1988.
11. Tiruvarur XVII - 585 *உளமகிழ்ந்தருளிய உலகுடைய முக்கோக் கிழானடியுடன் வாழி வாழி மணம்புணர்ந்து வாழி பலவோங்கிச் செம்பொன் வீர சிம்மாதனத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு பத்தாவது—*
12. S. I. IV - 1396 - *ஐம்பத்தி அய்யாண்டு திருவிராஜ்யம் செய்தருளி, எழுபத்து மூவாண்டு திருநக்ஷத்திரம் செலுத்தின ஸ்ரீ விஜயபாகு தேவர்*
13. N. Sethuraman - *அருளுடைச் சோழமண்டலம்* - The Cholas - The Medieval Pandyas
14. *மேற்படி நூல்கள்*
15. *பண்டாரத்தார் சோழர் வரலாறு* - அண்ணாமலை பல்கலைக் கழகம்
16. E. I. X page 127 - E. I. XI page 123 - A R. E. 1914 page 110 - A. R. E. 1918 page 110 - A. R. E. 1921-22 page 84 ; A. R. E. 1926-27 page 62 - A. R. E. 1927-28 page 45 - *திருவதிகைக் கல்வெட்டு 389/1927 – யாண்டு 13 என்று உள்ளது. இதனை யாண்டு 16 என்று படித்தனர் - திருப்புறம்பயம் கல்வெட்டு 158/1932 யாண்டு எட்டாவது என்று எழுத்தில் உள்ளது—இதனைப் பத்தாவது என்று பிரசுரித்தனர் — இப்படிப் பல உள்ளன.*
17. E. I. XXII page 86 - E. I. XXXI page 271
18. E. I. 31 - page 224 foot-note 2
19. Nandalur 571/1907 - S. I. IV Andhra records
20. N. Sethuraman - The Medieval Pandyas pages 34-38

# பள்ளிப்படை – இராஜகெம்பீரசஸ்வரம்

கும்கோணத்திற்கு தென்மேற்கு - 6 கிலோ மீட்டர் தூரத்தில் தாராசுரம் என்னும் கிராமம் உள்ளது. இவ்வூர் இராஜராஜனின் பெயரால் இராஜராஜபுரம் என்று அழைக்கப்பட்டு பிற்காலத்தில் மருவி தாராசுரம் என்று ஆயிற்று. இவ்வூரில் மிகப்பெரிய சிவன் கோயிலை இராஜராஜன் கட்டினான். இதன் பெயர் இராஜராஜேஸ் வரம் என்பதாகும். இக்கோயிலில் இம்மன்னனது 21-ஆம் யாண்டுக் கல்வெட்டு உள்ளதால் இது 1167-க்கு முன் கட்டப்பட்டது எனக் கொள்ளலாம். இக் கல்வெட்டில் இராஜராஜனின் பெயரால் இராஜராஜன் திருமடை விளாகம், இராஜராஜன் திருமாளிகை, இராஜராஜன் கருவூலம் (*Treasury*) ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.[1] ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் இராஜராஜபுரத்தை குறிப்பிட்டு, இங்குள்ள இராஜராஜேஸ்வரம் கோயில் இராஜராஜனால் கட்டப்பட்டது என்றும் கூறுகின்றார்.

இக்கோயிலில், இராஜராஜன், இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மாறவர்மன் வீரபாண்டியன், (1337) மாறவர்மன் ஸ்ரீவல்லபன் (1366) ஆகியோரது கல்வெட்டுக்களும், விஜயநகர அரசு காலத்திய (1486) கல்வெட்டு ஒன்றும் உள்ளன.

இக் கல்வெட்டுக்கள் 1908-இல் படியெடுக்கப்பட்டு சாசன அறிக்கை எண்கள் 16-இலிருந்து 23-ஆக வெளி வந்துள்ளன. கால ஓட்டத்தில் இக்கோயிலின் சுற்றுப் புறம் மண்மேடிட்டுவிட்டது. பிரகார மதில்களின் அடித் தளம் சுமார் 2-மீட்டருக்குக் கீழே உள்ளது. அடியேன் இக்கோயிலுக்கு அடிக்கடி செல்வது வழக்கம். 1979 ஏப்ரல் மாதம் இக்கோயிலின் கிழக்குச்சுவரின் தென் பகுதியை ஆய்ந்தேன். சில கல்வெட்டுக்கள் பூமியின் அடியில் இருக்கலாம் என்று சந்தேகித்தேன். மைசூரில் உள்ள மத்திய தொல்பொருள் கல்வெட்டு ஆய்வு இலாகாவுடன் (*Office of the Chief Epigraphist*) தொடர்பு கொண்டேன். இத்துறையின் கல்வெட்டாய்வாளர் திரு

சி. ஆர். சீனிவாசன் அவர்கள் வந்தார்கள். தென்புறம் கிழக்கு சுவருக்கு அடியில் 10-மீட்டர் நீளம் 2-மீட்டர் அகலம் 2-மீட்டர் ஆழத்திற்கு அகழ்ந்தோம். இரண்டு புதிய கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்தோம். இவை படியெடுக்கப்பட்டன.

இதில் ஒரு கல்வெட்டு இராஜாதிராஜனின் 5-ஆம் யாண்டு - 1171-க்கு உரியது. கோயிலில் திருமஞ்சனம் ஆட்டுவார்க்காகக் கொடுத்த நிவந்தம் கூறப்பட்டுள்ளது. அடுத்த கல்வெட்டு கோனேரின்மைகொண்டான் என்று துடங்குகிறது. கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ள மற்ற செய்திகளால் இக் கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்கனுடையது என்பதை அறியலாம். ஆட்சியாண்டு 5-நாள் 443 கொடுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி. பி. 1183 ஆகும். மன்னனுடைய 5-ஆம் ஆண்டு துடக்கத்தில் 1182 ஆனி மாதம் - அரசன் இட்ட உத்தரவு கூறப்படுகிறது. ஆற்றூர் உடையான் கூத்தன் என்பவனுக்கு இராஜராஜ சதுர்வேதி மங்கலத்து ஊர் கணக்குக்காணி அளிக்கப்பட்டது என சொல்லப்பட்டுள்ளது. மேலும் இந்நாட்டு பள்ளிப்படை இராஜகெம்பீர ஈஸ்வரமுடையார் கோயிலிலும், புவனமுழுதுடையார் ஈஸ்வரமுடையார் கோயிலிலும், திரிபுவன முழுதுமுடை ஈஸ்வரமுடையார் கோயிலிலும், ஏழுலகமுழுதுடை ஈஸ்வரமுடையார் கோயிலிலும், உலகுடைமுக்கோக்கிழானடி ஈஸ்வரமுடையார் கோயிலிலும், கணக்கனாக ஆற்றூர் உடையான் கூத்தன் நியமிக்கப்பட்டு, அவனுக்கு செம்பாதிக்காணி அளிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டு உள்ளது. மேலும் இவ்விவரங்கள் யாவும் **இவ்வைந்து பள்ளிப்படைக் கோயில்களிலும் கல்லில் வெட்டப்பட்டன** என்றும் சொல்லப்பட்டுள்ளது.[3]

இராஜராஜனுக்கு இராஜகெம்பீரன் என்ற பெயர் உண்டு. தாராசுரத்துக்கோயில் திருமண்டபத்தில் இராஜகெம்பீரன் திருமண்டபம் என்று கல்லில் வெட்டப்பட்டுள்ளது. ஒட்டக்கூத்தரும் தக்கயாகப்பரணியில்



இராஜராஜனை இராஜகெம்பீரன் என்று குறிப்பிடுகிறார். பள்ளிப்படை என்றால் இறந்தவரின் பூத உடல் மீது எழுப்பப்படும் சிவன் கோயிலாகும். இராஜராஜன் 1173-இல் இறந்தான் என்பதை முன்பே கண்டோம். இதற்குப் பின் மன்னனது நான்கு மனைவிகளும் இறந்தார்கள். (சதியோ?) பின் இவர்களின் பூத உடல்கள் மீது 5 பள்ளிப்படைக் கோயில்கள் கட்டப்பட்டன. குலோத்துங்கனின் சேரனூர் கல்வெட்டில்,

> "தாரணிகொள் திருத்தாதைக்கும் இராஜ
> ராஜீசுரத்தார்க்கும் - காரணச்சிறந்த
> கோயில் அணிதிகழ் பொன் வேய்ந்தருளி......"

என்று கூறப்பட்டுள்ளது.[4] எனவே தந்தையார் துஞ்சும் பள்ளிப்படை இராஜகெம்பீர ஈஸ்வரமுடையார் கோயிலுக்கு குலோத்துங்கன் பொனவேய்ந்தான் என்று அறியலாம். தாராசுரம் கோயிலில் உள்ள குலோத்துங்கனின் 8-ஆம் யாண்டுக் கல்வெட்டு, இராஜராஜேஸ்வரம் கோயிலுக்கு பொன்வேய்ந்ததை உறுதிப்படுத்துகின்றது.[5]

தாராசுரத்து இராஜராஜேஸ்வரம் கோயில் 1167 இல் எடுக்கப்பட்டது என்பதை முன்பே கண்டோம். ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் இக்கோயிலைக் குறிப்பிடுவதால் - தக்கயாகப்பரணி இயற்றப்பட்ட காலம் 1167-க்குப்பிறகு என்று கொள்ளலாம். இக்கோயிலுக்கு ஒரு சரித்திரப் பின் அணியும் உள்ளது. தக்கயாகப்பரணி பாடல் 774-இல் ஒட்டக்கூத்தர் அதனைக் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.


*பிரட்டனையே பட்டங் கட்டரித்துப் பேர் ஏழுறை இலங்கர் புரக்க*
*இரட்டனையே பட்டங்கட்டி விட்ட இராச கம்பீரனை வாழ்த்தினவே*

மேலே உள்ள பாடலால் இராஜராஜன் மேலை சாளுக்கியர்களின அரசியலில் தலையிட்டான் என்பதை அறியலாம். மேலை சாளுக்கியர்களின் மன்னனான மூன்றாம் தைலா கல்யாணியில் அரசு புரிந்து கொண்டு இருந்தான். கலசூரி அரசர்கள் 1149-ல் தைலாவை

விரட்டிவிட்டு கல்யாணியை பிடித்துக் கொண்டு 20 ஆண்டுகளுக்கு அரசு புரியலாயினர். மூன்றாம் தைலா வின் மகனான நான்காம் சோமேஸ்வரன் கர்நாடகத்தின் தென்பகுதியில் ஒளிந்து கொண்டான். அப்பொழுது கல்யாணியில் அரசுபுரிந்து கொண்டிருந்த கலசூரி அரசனின் பெயர் பிஜ்ஜலன் என்பதாகும். சோமேஸ் வரன் பிஜ்ஜலனை விரட்டி விட்டு மீண்டும் தனக்குரிய கல்யாணியின் சிம்மாதனத்தில் ஏறும் தருணத்தை எதிர் பார்த்து இருந்தான். இதற்காக இரண்டாம் இராஜராஜ சோழனின் உதவியை நாடினான்.

ஆந்திராவில் வேங்கி நாட்டில் வெளநாட்டு மன்னனான இராஜேந்திரசோடன் என்பவன் இரண்டாம் இராஜராஜ சோழனுக்கு உட்பட்டவனாக இருந்தான். இராஜராஜனின் ஆணையின் பேரில் இராஜேந்திர சோடன் கலசூரி மன்னர்களுடன் போரிட்டான். கோசர்லகோட்டா என்னும் இடத்தில் மிகப்பெரும் சண்டை நடந்தது. கலசூரி மன்னனின் தளபதியான சாவண்டனை இராஜேந்திர சோடன் கொன்றுவிட்டான். மேலை சாளுக்கிய மன்னன் நான்காம் சோமேஸ்வரனை மீண்டும் கல்யாணியின் அரியணையில் ஏற்றினான். இச்செய்திகளை கேயூரபாகுசரிதமு என்ற தெலுங்கு காவியத்திலும் இராஜேந்திர சோடனின் கல்வெட்டுக் களிலும் காணலாம். இந்நிகழ்ச்சிகள் 1169-இல் நடந்தன.[6] புரட்டனாகிய கலசூரி மன்னனை நீக்கிவிட்டு இரட்டனாகிய மேலை சாளுக்கிய மன்னனுக்கு பட்டம் கட்டிவிட்ட இராஜகம்பீரன் என்று ஒட்டக்கூத்தர் கூறுவதால் தக்கயாகப்பரணியின் காலம் 1169-க்கு பின் என்று கொள்ளலாம்.

முதல் குலோத்துங்க சோழனின் (கி. பி. 1070) காலத்திலிருந்து தஞ்சை சோழ அரசர்கள் சாளுக்கிய சோழர்கள் எனப்பட்டனர். சோழர்களுக்கும் வேங்கி நாட்டு அரசர்களுக்கும் இடையே மணவினைத்தொடர்பு இருந்தது. வேங்கி நாட்டவர்க்கு வேங்கி நாட்டில் உள்ள



தாராசுரம் — கல்வெட்டு — பள்ளிப்படை இராஜகேசப்பிள்ளையார்
(நன்றி: தமிழக அரசு தொல்பொருள் கல்வெட்டு ஆய்வுத்துறை)

திராக்ஷாராமா எனப்படும் கோயிலின் இறைவன் பீமேஸ்வரர் குலதெய்வமாகும். இது சோழர்களின் வேங்கி குல மரபுப்படி அமைந்ததாகும். இக்கோயிலுக்குரிய புராணத்தில், சிவபெருமான், புரட்டனாகிய தக்ஷனை அடக்கி தேவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாறு தக்ஷயக்ஞம் என்ற புராணத்தை அடிப்படையாகக் கொண்டது. (தக்ஷ கிராமம் - திராக்ஷா ராமாவாயிற்று) இப்புராணத்தையே தக்கயாகப்பரணி என்பதாக ஒட்டக்கூத்தர் எழுதியுள்ளார். மேலே சொல்லப்பட்டுள்ள பாடலில் அவர் மறைமுகமாகக் கூறுவதாவது:

"சிவபெருமான் தனது பிரிதிநிதியாகிய வீரபத்திரரைக் கொண்டு தக்ஷனை அடக்கி தேவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வெற்றிக்களிப்புக்கொண்டார். அதே போன்று இராஜராஜசோழன் தனது பிரிதிநிதி இராஜேந்திர சோடனை ஏவி புரட்டர்களாகிய கலசூரி அரசர்களை ஒழித்து இரட்டர்களாகிய மேலை சாளுக்கியர்களுக்கு அடைக்கலம் அளித்தான்."

ஒட்டக்கூத்தர் புராண வரலாறு மூலம் கீழை சாளுக்கியருக்கும், சோழர்களுக்கும் இடையே நிலவிய உறவுத்தொடர்பை உணர்த்துகின்றார். தக்ஷனை சம்ஹாரம் செய்த சிவபெருமான் இராஜராஜபுரத்து இராஜராஜேஸ்வரத்தில் வெற்றிக்களிப்புடன் எழுந்தருளினார் என நயம்படக் கூறி சரித்திர நிகழ்ச்சிகளை நம் முன் வைக்கின்றார். தக்கயாகப்பரணியில் கூறப்பட்டுள்ள மேலும் சில செய்திகளைப் பின்னால் பார்ப்போம்.

## FOOT NOTES

1. A. R. E. 17/1908 2. A. R. E. 289/1978-79
3. A. R. E. 290/1978-79; I have edited this inscription in the Epigraphia Indica Volume 41 4. Pd 163 and Pd 166.
5. N. Sethuraman – The Cholas pages 173 – 176
6. Kurgod Inscription – E. I. Volume XIV – Page 225 Someswara issues his orders from Kalyana in 1173

# நன்றி மறவாத குலோத்துங்கன்

இராஜாதிராஜனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையே அரசுரிமைப் போட்டி இருந்தது. எனவே, 1178-இல் குலோத்துங்கன் சோழ அரியணையைக் கைப்பற்றி இராஜாதிராஜனைத் துரத்திவிட்டான் எனப் பண்டாரத்தார் எழுதியுள்ளார். காலக் கணக்கீட்டைச் சரியாகச் செய்யாததாலும், கீல்ஹார்ன் சந்தேகத்துடன் கூறிய காலக் கணக்கீட்டை வேதவாக்கு எனக் கொண்டு— இராஜாதிராஜனின் கல்வெட்டுக்களில் உள்ள ஆட்சி ஆண்டுகளைத் திருத்தியதாலுமே இக்குழப்பங்கள் ஏற்பட்டன.

குலோத்துங்கனால் விரட்டியடிக்கப்பட்ட இராஜாதிராஜன் தமிழ்நாட்டைத் துறந்து வேங்கிநாடு சென்றான் என டி. என். சுப்ரமண்யம் அவர்களும் கூறியுள்ளார்கள். காலக் கணக்கீட்டைச் சரியாகச் செய்யாமல் விதண்டா வாதங்களுக்காகவே எழுதப்பட்டு உள்ள தென் இந்தியக் கோயில் சாசனம் பாகம் 3 - பகுதி 2 என்னும் நூலைப் படித்தால் இதன் உண்மை புரியும். இந்நூலின் பக்கம் 12-இல் சோழர்களின் தலைநகர் பழையாறை திருச்சத்திமுற்றத்துச் சாசனத்தைக் கொடுத்துள்ளேன். இதில் இராஜாதிராஜன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவரின் ஆட்சியைக் கணக்கிட்டு செயல்படுங்கள் என்று கூறுகின்றானே? இராஜராஜனின் இரு புதல்வர்களுக்கும் 1173 முதல் இராஜாதிராஜன் மெய்த்துணையாய்த் தோற்றிய பாதுகாவலனாக இருந்துள்ளான். மேலும் 1178 முதல் 1182 வரை குலோத்துங்கனோடு இணைந்து அரசியலில் பயிற்சியும் அளித்துள்ளான். இராஜாதிராஜன் வேங்கி நாடு சென்றாலும் குலோத்துங்கன் அவனை மறக்கவில்லை. இராஜாதிராஜனுக்கு பூமருவிய திசைமுகத்தோன் என்று துடங்கும் மெய்க்கீர்த்தி கீழுரில் உள்ளது. அது வருமாறு;

*(S. I. I. VII 890)*



பூமருவிய திசைமுகத்தோன்
படைத்தபெரும் புவிவிளங்கத்
தேமருவிய பதம்துளவத்
திருநெடுமால் இவனென்ன
நீராழி புடைசூழ்ந்த
வரையாழி நெடும்புறத்தில்
ஓராழி தனிநடாத்த
உதயகுலத்து அவதரித்து
கருங்கலியின் இருள்ஒதுங்க
கதிர்வெண்குடை நிலாஎறிப்ப
அருங்கதிரில் வெயில்விரிக்கும்
மணிமகுடம் புனைந்தருளி
மண்களிப்பவும் மனம்களிப்பவும்
மலர்மடந்தையர் முதல்மடந்தையர்
கண்களிப்பவும் தண்ணளிப்பப்
பெருங்கருணையால் முதற்காவல்பூண்டு

செம்பொன் வீரசிம்மாசனத்து
புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோவிராஜகேஸரிபந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீராஜாதிராஜ தேவர்.........

குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தி புயல்வாய்த்து வளம் பெருக அல்லது புயல் வாய்த்து மண் வளர எனத் துடங்கும். ஆனால் மேலே உள்ள பூமருவிய திசை முகத்தோன் என்னும் மெய்க்கீர்த்தியை குலோத்துங்கனது திருநறையூர்க் கல்வெட்டு (176/1908) யாண்டு 5, வழுவூர்க் கல்வெட்டு (423/1912) யாண்டு 33 இவைகளில் காணலாம். இராஜாதிராஜனை நினைவு கூறும்போதெல்லாம் அவனுடைய மெய்க்கீர்த்தியை ஏற்கிறான் - குலோத்துங்கன். திருவெண்ணெய்நல்லூரில் சிவபெருமான் தோழமை யோகத்தை

சுந்தரமூர்த்தி நாயனார்க்கு அருளினார் அல்லவா? அதே கோயிலில் குலோத்துங்கன் தனது கல்வெட்டை எவ்வாறு எழுதுகிறான் எனப் பாருங்கள். (313/1902)

“ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திசைமுகத்தோன் படைத்த பெரும்புவிவிளங்க என்னும் சீர்மெய்க்கீர்த்தி முடிய எழுதி திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 17-ஆவது...........”

“எனது கல்வெட்டைப் படிக்கும் முன் இராஜாதி ராஜனின் சீர் மெய்க்கீர்த்தியைச் சொல்லுங்கள்” என்று கூறுகிறான் குலோத்துங்கன். அவனா இராஜாதிராஜனுடன் முரண்பட்டவன்? எங்கே கூறுகிறான்? சைவத்தின் தோழமை யோகத்தின் தலைமைப் பீடத்தில் அல்லவா கூறுகிறான். வேறு விளக்கமும் வேண்டுமா? குலோத்துங்கன் தனது 3-ஆம் ஆண்டில் வலிவலத்தில் “இராஜாதிராஜன் பெருங்குளம்” என்ற குளத்தை வெட்டினான் (110/1911). திருவாரூர் அருகே அய்யம்பேட்டையில் இராஜாதிராஜ ஈஸ்வரம் என்ற கோயிலையும் கட்டினான் (117/1928). மூன்றாம் குலோத்துங்க சோழன் நன்றி மறவாக் கொற்றவன்.



# பாண்டியர் உள்நாட்டுப் போர்

தென் பாண்டி நாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் மாறவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியன் கி. பி. 1145-இல் முடி சூடினான். இவனது மெய்க்கீர்த்தி, **பூமகள் ஜெயமகள்** எனத் துடங்கும். திருநெல்வேலி, இராமநாதபுரம், திருவிதாங்கூரின் தென் பகுதிகள் ஆகியவை இவனது ஆட்சியின் கீழ் இருந்தன.[1] கொங்கு நாட்டு மன்னன் குலோத்துங்கனின் சகோதரியை ஸ்ரீவல்லபன் மணந்தான். இவர்களுக்குப் பிறந்தவனே சடையவர்மன் குலசேகர பாண்டியன் ஆவான். ஸ்ரீவல்லபனின் மறைவிற்குப் பிறகு குலசேகரன் 1162-இல் பங்குனி மாதத்தில் முடி சூடினான். இவனது மெய்க்கீர்த்தி **பூதலமடந்தை** எனத் துடங்கும்.[2]

இக்காலக் கட்டத்தில் மதுரையில் 1143-இலிருந்து மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் என்னும் மன்னன் ஆண்டுவந்தான். இவனது மெய்க்கீர்த்தி **திருமகள் புணர** எனத் துடங்கும்.[3] பராக்கிரம பாண்டியனுக்கும் குலசேகரனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு உள்நாட்டுப் போர் மூண்டது. பராக்கிரம பாண்டியன் இலங்கை அரசன் பராக்கிரம பாகுவின் உதவியை நாடினான். இலங்கையின் உதவி கிடைப்பதற்கு முன் குலசேகரன் மதுரையை முற்றுகையிட்டான். பெரும் போர் நிகழ்ந்தது. இப்போரில் கொங்கு மன்னன் குலோத்துங்கனும் தனது மருமகனான குலசேகர பாண்டியனுக்கு உதவினான். பராக்கிரம பாண்டியன் போரில் கொல்லப்பட்டான். குலசேகரன் மதுரையில் அரியணை ஏறினான். காலஞ்சென்ற பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியன் கேரளாவிற்கு ஓடிவிட்டான்.[4] இந்நிகழ்ச்சிகள் 1166-இல் நடந்தன.

இலங்கை மன்னன் பராக்கிரம பாகு வாளா இருக்கவில்லை. காலஞ்சென்ற பாராக்கிரம பாண்டியனின் மகன் சடையவர்மன் வீரபாண்டியனுக்கு உதவ முன்

வந்தான். இலங்கைப் படை 1169-இல் இராமேஸ்வரம் தீவைப் பிடித்துக்கொண்டது.[5] பிறகு மதுரையிலிருந்து குலசேகரனை விரட்டினர். சிங்களர் படை சோழ மண்டலம் புகாதவாறு பெருமான் நம்பிப் பல்லவரையன் பாதுகாத்தான். இந்நிகழ்ச்சிகள் ஆர்ப்பாக்கத்தில் உள்ள இராஜாதிராஜனின் 5-ஆம் யாண்டு 1171-க்கு உரிய கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளன.[6] இலங்கைப் படை மதுரையைப் பிடித்து குலசேகரனை விரட்டிவிட்டு சடையவர்மன் வீரபாண்டியனை அரியணையில் ஏற்றியது. வீரபாண்டியன் முடி சூடியது 1170 ஆகும். வீரபாண்டியன் சிங்களவர்களின் படைத்தளபதிகளான இலங்காபுரித் தண்டநாயகன், ஜகத்ரய தண்டநாயகன் இவர்களது கைப்பொம்மையாக இருந்தான். 1170-இல் வெற்றிக் களிப்புக்கொண்ட வீரபாண்டியன் முடி சூடிய நாளைக் கொண்டாடினான். இதனை சுசீந்திரம் கல்வெட்டு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:[7]

பூமடந்தையும் செயமடந்தையும் பொலிந்து திருப்புய்த்திருப்ப
பார்முழுதும் குடைநிழற்ற பராக்கிரமத்தால் முடிசூடி
தென்மதுராபுரித் திருவிளையாட்டத்தில்கண்டு மன்னரெல்லாம்
வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி மாபாரதம் பொருதருளி
மன்னவர்க்குத் தூதுசென்றருளி தேவாசுரமது கைத்திருத்தி
தேனருமறையும் கொண்டருளி வடவரையில் கயல் பொறித்து
வானவர் கோனாரம் பூண்டு திடவாசக் குறுமுனிபால்
செந்தமிழ்நூல் தெரிந்தருளித் தலிரிருங்கை மாதுரிமைச்
செங்கோல் எங்கும் திசை நடாத்தி
மன்னிய வீரசிம்மாசனத்தில் திரைலோக்கிய முழுதுடையா
வீற்றிருந்தருளிய மாமுதல் மதிக்குலம் விளக்கிய [ரோடும்
கோமுதல் கொற்றவன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
வீரபாண்டியதேவர் அபிஷேக காலத்தில்.........

குலசேகர பாண்டியன் சோழர்களிடம் அடைக்கலம் புகுந்தான். சோழரின் மந்திரியான பெருமான் நம்பிப் பல்லவரையனும், தளபதியான வேதவனம் உடையான் அண்ணன் பல்லவரையனும் மதுரைமீது படையெடுத்துச் சென்றனர். இலங்கைத் தளபதிகளின் தலைகளைக்



கொய்து மதுரைக் கோட்டை வாசலில் தைப்பித்தனர். இலங்கைப் படைகள் தோற்று ஓடின. இருந்தாலும் இராமேஸ்வரம் தீவு இலங்கையர் வசமே இருந்தது. இந்நிகழ்ச்சிகளை இராஜாதிராஜனின் 8-ஆம் ஆண்டுக்குரிய (1174) பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டு கூறுகிறது. பெருமான் நம்பிப் பல்லவரையன் 1173 புரட்டாசி மாதத்திற்கு மேல் இறந்தான் என்பதை முன்பே கண்டோம். எனவே சோழர்கள் குலசேகரனை 1173-இன் முற்பகுதியில் அரியணை ஏற்றினர் எனக் கொள்ளலாம். வீரபாண்டியன் தென்பாண்டி நாட்டிற்கு ஓடிவிட்டான். திருநெல்வேலி மாவட்டம் செங்கேணியான வெங்கடநாதபுரம் கல்வெட்டு (54/1945) சடையவர்மன் வீரபாண்டியனுக்கு உரியது. இதில் யாண்டு 3, மீன மாதம், அபரபக்ஷ சப்தமி, வியாழக் கிழமை, மூல நக்ஷத்திரம் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் காலம் கி. பி. 1173, மார்ச் மாதம், 8-ஆம் தேதி ஆகும். எனவே, வீரபாண்டியன் 1173 முற்பகுதியில் தென் பாண்டி நாட்டிற்குத் துரத்தப்பட்டான் என்பதையும், அதே காலத்தில் குலசேகரன் மதுரையில் அரியணை ஏறினான் என்பதையும் நன்கு அறியலாம். அப்போது மாமன்னன் இராஜராஜன் உயிருடனிருந்தான். எனவே, ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடல் 803-இல்

"தென்னவர் தென்மதுராபுரி சீறிய
மன்னவர் மன்னன் வரோதயன் வாழியவே"

என்று மேற்கூறிய வெற்றிகளை மாமன்னனான இராஜராஜனுக்கு உரியனவாகக் கூறுகின்றார். இராஜராஜன் 1173 ஜூலை மாதத்திற்குப் பிறகு இறந்தான் என்பதை முன்பே கண்டோம். **எனவே, ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியை 1173-இன் மத்திய காலத்தில் எழுதினார் என்று கொள்ளலாம்.** தமிழ் நாவலர் சரிதையின் ஒரு பாடல் கல்யாணபுரம் (கல்யாணி) வெற்றியையும், மதுரை, இலங்கைப் போர் வெற்றியையும் இராஜராஜனுக்கு உரித்தனவாகக் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

கரத்தும் சிரத்துங் களிக்கும்
களிறுடைக் கண்டன் வந்தான்
இரத்துள் கபாட மினிதிறப்
பாய்பண் டிவன னங்கே
உரத்துஞ் சிரத்துங் கபாடநீ
திறத்திட்ட துண்டி லங்கா
புரத்துங் கபாட புரத்துங்
கல்யாண புரத்திலுமே.

இராஜராஜனுக்காக கபாடபுரம், மதுரை, இலங்கை. கல்யாணபுரம் இவைகளின் வாயில்கள் எப்போதும் திறந்து இருக்குமாம். நயம்படக் கூறும் இப்பாடல் சரித்திர நிகழ்ச்சிகளுக்கு ஒத்து வருகிறது.

## குலசேகரன்

மதுரையில் அரியணை ஏறிய குலசேகர பாண்டியன் சோழர்கள் செய்த உதவியை மறந்து இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவோடு தொடர்பு கொண்டான். இக் காலக்கட்டத்தில் பராக்கிரம பாகுவின் சகோதரி மானா பரணன் என்பவனை மணந்திருந்தாள். இவர்களது மகனான ஸ்ரீவல்லபன் ஈழ நாட்டு அரசு உரிமைக்கு முயன்றான். பராக்கிரம பாகுவால் அவமானப்படுத்தப் பட்டான். இத்தருணத்தை எதிர்பார்த்திருந்த சோழர்கள் ஸ்ரீவல்லபனைத் தங்கள் பக்கம் இழுத்தனர்.

இலங்கையில் பராக்கிரம பாகு, ஊராத்துறை, புலைச் சேரி, மாதோட்டம், வல்லிக்காமம், மட்டிவாழ் ஆகிய இடங்களில் படகுகளைத் தொகுத்து படை திரட்ட லானான். சோழன் இச்செய்தியை அறிந்தான். பராக்கிரம பாகுவோடு மாறுபட்டு இருந்த ஸ்ரீவல்லபனை அழைத்துப் படை உதவி செய்தான். சோழர்களின் தளபதி வேதவனம் உடையான் அம்மை அப்பனான அண்ணன் பல்லவரையன் என்பவனுடைய தலைமை யில் சோழர் படையும், ஸ்ரீவல்லபனின் படையும் ஈழ நாட்டில் நுழைந்து தென் வடலாக 30 காதமும், கீழ்



மேலாக 20 காதமும் அழித்தன. படகுத் துறைகள் அழிக்கப்பட்டன (*Naval Bases*). இலங்கையின் வட பகுதி தீக்கிரையாயிற்று. அடுத்து சோழர்களின் படைத் தளபதியான அண்ணன் பல்லவரையன் மதுரைமீது படையெடுத்தான். நன்றி மறந்த குலசேகரனை மதுரை யிலிருந்து நீக்கி வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தினான்.

ஆலங்குடியிலுள்ள இராஜாதிராஜனின் கல்வெட்டு யாண்டு 11, நாள் 182-க்கு உரியது.[8] இதன் காலம் 1177 தை மாதமாகும். இக்கல்வெட்டு **மதுரையும் ஈழமும் கொண்டருளிய இராஜாதிராஜன்** என அறிமுகப்படுத்துகிறது. இதனால் ஈழப் படையெடுப்பு 1176-இல் நடந்தது எனக் கொள்ளலாம். அண்ணன் பல்லவரையனின் இலங்கை, மதுரை வெற்றிகளை திருவாலங்காடு, திருமயானம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.[9] இவைகளில் யாண்டு 12, நாள் 157 கொடுக்கப்பட்டுள்ளன. இவை களின் காலம் 1177, மார்கழி மாதமாகும். 1177-க்குப் பிறகு குலசேகரன் என்ன ஆனான் என்பது தெரியாது. அவனுடைய கல்வெட்டுக்கள் யாண்டு 16, நாள் 195 வரை கிடைக்கின்றன.[10] அதாவது 1177 ஐப்பசி மாதம் வரை கிடைக்கின்றன. குலசேகரனை விரட்டியதை இராஜாதிராஜன் மார்கழி மாதத்தில் கூறுகிறான். எனவே குலசேகரனின் ஆட்சி 1177 கார்த்திகையுடன் முடி வடைந்தது எனக் கொள்ளலாம். இவ்வெற்றிகளின் காரணமாக இராஜாதிராஜனின் 11-ஆம் ஆட்சியாண் டிற்குப் பிறகு வெட்டப்பட்ட கல்வெட்டுக்கள் **மதுரையும் ஈழமும் கொண்டருளிய இராஜாதிராஜன்** எனக் கூறு கின்றன. அக்கல்வெட்டுக்களின் பட்டியல் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### மதுரையும் ஈழமும் கொண்டருளிய இராஜாதிராஜன்

| சாசன எண் | ஊர் | யாண்டு | காலம் |
|---|---|---|---|
| 3/1899 | ஆலங்குடி | 11 | 1177-தை |
| 465/1905 | திருவாலங்காடு | 12 | 1177-மார்கழி |
| 261/1925 | திருமயானம் | 12 | 1177-மார்கழி |
| 731/1909 | ஆலம்பாக்கம் | 13 | 1179 |
| 228/1917 | குறுக்கை | 13 | 1179 |
| 340/1914 | நாங்குப்பட்டி | 13 | 1179 |
| 193/1901 | தென்னேரி | 13 | 1179 |
| 449/1912 | கோட்டூர் | 13 | 1179 |
| 80/1913 | திருச்செங்காட்டங்குடி | 13 | 1179 |
| 443/1912 | கோட்டூர் | 14 | 1180 |
| 129/1927 | ஆத்தூர் | 14 | 1180 |
| 253/1925 | திருக்கடையூர் | 14 | 1180 |
| 58/1906 | திருமயானம் | 14 | 1180 |

## கரிகால சோழ தேவன்

இராஜாதி ராஜனுக்கு கரிகால சோழ தேவன் என்ற பெயரும் இருந்தது. சிதம்பரம் கல்வெட்டு (263/1913) திரிபுவனச் சக்கரவர்த்திகள் கரிகால சோழ தேவரான ஸ்ரீ இராஜாதி ராஜ தேவர்க்கு யாண்டு 2 எனத் தொடர்கிறது. தஞ்சை மாவட்டம் ஆத்தூர் கல்வெட்டு (129/1927) திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஈழமும் மதுரையும் கொண்டருளின கரிகால சோழ தேவர்க்கு யாண்டு 14 எனக் கூறுகிறது. கதிராமங்கலத்திலிருந்து கிடைக்கும் மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு (68 1931) யாண்டு 32-க்கு உரியது. (கி. பி. 1210) பெரியதேவர் கரிகால சோழதேவரான இராஜாதி ராஜ தேவரின் யாண்டு 6-இல் செய்யப்பட்ட நிவந்தத்தைக் கூறுகிறது.

1177-இல் கார்த்திகை, மார்கழி மாதங்களில் மதுரைப் போர் நடந்து உள்ளது. 1178 ஆனி மாதத்தில்



மூன்றாம் குலோத்துங்கன் முடி சூடினான். எனவே, மதுரைப் போரில் பங்கேற்று இருக்கலாம்.[11] குலோத்துங்கனின் 6-ஆம் யாண்டு வரை (1184) வெட்டப்பட்ட கல்வெட்டுக்கள் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவன் எனக் கூறுகின்றன. 1177 மதுரைப் போரில் இளங்கோப் பருவத்தில் பங்கு கொண்ட குலோத்துங்கன் குலசேகரனைக் கொன்றுவிட்டானோ? (முன்னம் இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடந்துள்ளது. கி. பி. 959-இல் இரண்டாம் ஆதித்ய கரிகாலன் தான் முடி சூடுவதற்கு முன்பே வீரபாண்டியன் தலையைக் கொய்தான் எனக் கரந்தை, திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. ஆதித்ய கரிகாலன் முடி சூடியது கி. பி. 960 ஆகும். அரச குமாரர்கள் இளங்கோப் பருவத்தில் முடி சூடுவதற்கு முன் போரில் ஈடுபடுவது புதுமையானது அல்ல.) குலோத்துங்கனது கல்வெட்டுக்களில் 6-ஆம் ஆண்டு வரை மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய என்று வரும். 8-ஆம் ஆண்டுக்குப் பிறகு வெட்டப்பட்ட கல்வெட்டுக்களில் மதுரை கொண்டருளிய என்றே வரும். கீழே உள்ள பட்டியல்களில் இதைக் காணலாம். இதனால் இளங்கோப் பருவத்தில் இராஜாதி ராஜனுடன் சேர்ந்து போரில் ஈடுபட்டான் என்பதையும் தனது 8-ஆம் ஆண்டில் தனிப்பட்ட முறையில் மதுரைப் போரை நிகழ்த்தினான் என்பதையும் அறியலாம். பின்னால் நாம் சந்திக்கப் போகும் வீரபாண்டியனின் கல்வெட்டுக்களும் இதனை உறுதி செய்கின்றன.

### மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன்

| சாசனம் | ஊர் | யாண்டு | காலம் |
|---|---|---|---|
| 190/1904 | திருவக்கரை | 2 | 1180 |
| 24பி/1903 | திட்டக்குடி | 4 | 1182 |
| 24ஏ/1903 | திட்டக்குடி | 5 | 1183 |
| 93/1918 | குகையூர் | 6 | 1184 |

## மதுரை கொண்டருளிய குலோத்துங்கன்

| சாசன எண் | ஊர் | யாண்டு | காலம் |
|---|---|---|---|
| 25/1903 | திட்டக்குடி | 8 | 1186 |
| 61/1907 | திருமயானம் | 8 | 1186 |
| 457/1902 | சிதம்பரம் | 9 | 1186 |
| 125/1896 | சீர்காழி | 9 | அக்டோபர் 1186 |
| 37/1906 | திருக்கடையூர் | 9 | டிசம்பர் 1187 |
| 62/1906 | திருமயானம் | 9 | 1187 |
| 63/1906 | திருமயானம் | 9 | 1187 |
| 25/1918 | திருவிடைவாயில் | 9 | 1187 |
| 41/1914 | திருப்பனந்தாள் | 9 | 4-5-1187 |
| 296/1927 | கும்பகோணம் | 9 | 1-6-1187 |
| 393/1907 | மருத்துவக்குடி | 10 | 18-7-1187 |
| 611/1902 | ஹரித்துவாரமங்கலம் | 10 | 5-1-1188 |

திருக்கோஷ்டியூர் திருமலைக் கல்வெட்டுக்கள் சடையவர்மன் வீரபாண்டியனின் 11-ஆம் ஆண்டுக்கு உரியவை. இக்கல்வெட்டுக்களில் ஜெயங்கொண்ட சோழன் ஸ்ரீவலவன் களவழி நாடாழ்வான் என்னும் குறுநிலத் தலைவன் காணப்படுகிறான். இதே அதிகாரி 1190-இல் முடி சூடிய (பூவின்கிழத்தி) சடையவர்மன் குலசேகரனுடைய திருக்கோஷ்டியூர் 12-ஆம் ஆண்டு கல்வெட்டிலும் (1201) காணுார் 14-ஆம் ஆண்டுக் கல்வெட்டிலும் (1204) உள்ளான். எனவே, திருக்கோஷ்டியூர் திருமலைக் கல்வெட்டுக்களுக்கு உரிய சடையவர்மன் வீரபாண்டியன் நாம் தேடும் வீரபாண்டியனே என்பதை அறியலாம்.[12] இக்கல்வெட்டுக்களில் உள்ள வீரபாண்டியனின் மெய்க்கீர்த்தி வருமாறு:

பூமருவிய திருமாதும் ஜயமாதும் புயத்திருப்ப
திருமருவிய மலர்கூந்தல் சீர்மடந்தை பார்விளங்க
பொன்னிமயத் தருகடல்கள் பொலிவெய்தப்



புணரிசூழ்த்த மண்முழுதும் குடைநிழற்ற
மரபில் மணிமுடி சூடி செங்கோலால்
கருங்கலியைத் திக்கெட்டில் பிறஞ்செலுத்தி
வெற்பகோப மதசானையிறல் வேந்தர் திறையளப்பத்
தென்தமிழக ளொருமூன்றும் சதுர்வேதமும் தழைத்தோங்க
அணர்பிரான் மணியாகத் தணியாரமது புனைந்து
மன்னிய வீரசிம்மாசனத்து உலகமுழுதுடை யாளொடும்
வீற்றிருந்தருளிய மாமுதல் மதிக்குலம் விளக்கிய
கோமுதல் **கோச்சடைபந்மரான**
**திரிபுவனச் சக்கரவர்த்திகள்**
**ஸ்ரீவீரபாண்டியதேவர் மதுரைக் கோயில் வடக்கில்**
**தோப்பில் நீராவி மண்டபத்துப் பள்ளிக்கூடலில்**
**எழுந்தருளியிருந்து** யாண்டு இரண்டாவதின்
எதிர் ஒன்பதாவது முன்னூற்று நாற்பத்து ஒன்பதினால்[13]

மேலே உள்ள கல்வெட்டுக்களின் காலம் 1181 ஆகும். இக்காலங்களில் வீரபாண்டியன் சோழர்களுடன் எவ்விதப் பிணக்கமும் இல்லாமல் இருந்தான்.

நிற்க, இராஜாதி ராஜன் காலத்தில் ஈழப் படையெடுப்பின்போது ஸ்ரீவல்லபன் என்பவன் உதவி செய்தானல்லவா? இவன் பாண்டி நாட்டில் தென் பகுதியில் இருந்துவந்தான். இவன் 1158-இல் முடி சூடியவன். இவனது கல்வெட்டுக்கள் சடையவர்மன் என்ற பட்டப் பெயருடன் பாண்டி நாட்டில் கிடைக்கின்றன.[14] இவன் தனது மகன் மாறவர்மன் விக்கிரம பாண்டியனுக்கு 1181-இல் முடி சூட்டினான்.[15] ஸ்ரீவல்லபன் 1185-இல் இறந்தான். அடுத்த ஆண்டில் விக்கிரம பாண்டியனும் வீரபாண்டியனும் முரண்பட்டனர். விக்கிரம பாண்டியன் குலோத்துங்க சோழனது உதவியை நாடினான். குலோத்துங்கன் 1186-இல் மதுரைமீது படையெடுத்தான். வீரபாண்டியனை விரட்டினான். இவ்வெற்றியின் காரணமாக மதுரை கொண்டருளிய குலோத்துங்கன் என அழைக்கப்பட்டான். இச்செய்திகள் பட்டியலில் உள்ள சிதம்பரம் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டுள்ளன. அவை வருமாறு:

## சிதம்பரம் கல்வெட்டு[16] - 1186 - அக்டோபர்

(1) ஸ்வஸ்திஸ்ரீ உ புயல் வாய்த்து வளம் பெருகப் பொய்யாத நான்மறையின் செயல்வாய்ப்பத் திருமகளும் ஜயமகளும் சிறந்து வாழ வெண்மதி பொற்குடை விளங்க வேல்வேந்தரடி வணங்க மண்மடந்தை மனங்களிப்ப மனுநீதி தழைத் (2) தோங்கச் சக்கரமும் செங்கோலுந் திக்கனைத்துஞ் செலநடப்பக் கற்பகாலம் புவிகாக்கப் பொற்பமைந்த முடி புனைந்(து) விக்கிரமபாண்டியன் வேண்ட விட்ட தண்டால் வீரபாண்டியன் மகன்பட ஏழகப்படைபட மறப்படைபடச் சிங்களப்படை மூக்கறுப் புண்டு அலைகடல் (3) புக வீரபாண்டியனை முதுகிடும் படி தாக்கி மதுரையும் அரசுங்கொண்டு ஜயஸ்தம்பம் நட்டு அம்மதுரையும் அரசும் நாடும் அடைந்த பாண்டி யற்களித்தருளி மெய்ம் மலர்ந்த வீரக்கொடியுடன் தியாகக்கொடி எடுத்துச் செம்பொன் (வீ)ரசிம்ஹா ஸனத்துப் புவனமுழுதுடை (4) யாளொடும் வீற்றிருந்த ருளிய கோப்பரிகேசபந்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரை கொண்டருளின ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது நாள் எண்ப(த்) தெட்டினால்......

வீரபாண்டியன் வாளா இருக்கவில்லை. மீண்டும் நெட்டூரில் எதிர்த்துவந்தான். குலோத்துங்கன் அவனைத் தோற்கடித்து விக்கிரம பாண்டியனுக்கு மதுரையை அளித்தான். இந்நிகழ்ச்சி 1188-இன் முற்பகுதியில் நடந்திருக்கவேண்டும். இப்போரின் விவரங்கள் குலோத் துங்கனின் சிதம்பரம் கல்வெட்டு யாண்டு 11, நாள் 118-இல் மெய்க்கீர்த்தியில் சொல்லப்பட்டுள்ளன. இக் கல்வெட்டில் 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன்' என அழைக்கப்படு கிறான்.[17] வீரபாண்டியன் கேரளத்திற்கு ஓடிவிட்டான். நிற்க, வீரபாண்டியனுக்கு இத்துணை அளவு படை பலமும், துணிவும் எங்கிருந்து வந்தன. இலங்கையின் உதவியால்தான் இவ்வாறு வீரபாண்டியன் மீண்டும்- மீண்டும் படையெடுத்தான். எனவே, இலங்கையை ஒருவாறு ஒழித்துவிட குலோத்துங்கன் திட்டமிட்டான்.



## இலங்கை

இலங்கை மன்னன் பராக்கிரம பாகு மலேசியாவைச் சேர்ந்த சிம்ஹபுரத்து (சிங்கப்பூர்) நிசங்கமல்லனுக்குத் தனது மகள் சுபத்ராவைத் திருமணம் செய்து கொடுத்தான். 1186-இல் பராக்கிரம பாகு இறந்த பிறகு நிசங்கமல்லன் இலங்கை மன்னன் ஆனான். இராமேஸ்வரத்தில் கோட்டைக் கட்டிக்கொண்டான். அவனுடைய 1184-1185-க்குரிய கல்வெட்டு இன்றும் இராமேஸ்வரத்தில் உள்ளது. நிசங்கமல்லன் இருமுறை தமிழ்நாட்டின்மீது படையெடுத்ததாகவும் பாண்டியனின் தாயார் நிசங்கமல்லனின் உதவியை நாடியதாகவும் இலங்கைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இங்கு கூறப் படும் பாண்டியனின் தாய், வீரபாண்டியனின் தாயாராக இருக்கவேண்டும்.[18]

குலோத்துங்கன் மும்முறை இலங்கைமீது படை யெடுத்தான் என இலங்கைத் தளபதியான கிட்டி என்பவன் கூறியுள்ளான்.[19] 1188-இல் குலோத்துங்கன் இராமேஸ்வரத்தை மீட்டான். ஈழத்திற்குள்ளும் புகுந்து பெருஞ் சேதத்தை உண்டாக்கினான். இதனால் 'ஈழமும் மதுரையும் கொண்டருளிய குலோத்துங்கன்' என்று அழைக்கப்பட்டான். இப்பட்டப் பெயர் முதல் முதலாக திருக்கண்ணபுரம் கல்வெட்டு யாண்டு 11-இல் காணப் படுகிறது.[20] எனவே முதல் இலங்கைப் போர் 1188-இல் நடந்தது எனக் கொள்ளலாம். இலங்கையின் தொல்லை ஒழிந்ததால், விக்கிரம பாண்டியன் மகிழ்ந்தான். சேர்மா தேவியில் 1188-இல் இராமர், சீதை, லக்ஷ்மணன், அனுமன் ஆகியோருக்கு சிலைகள் எடுத்து நித்ய பூஜை வழிபாடுகளுக்கு நிவந்தம் அளித்தான்.[21] நியாயம்தானே! குலோத்துங்கன் 1193-இலும் இலங்கைமீது மீண்டும் படையெடுத்தான். இலங்கை மன்னன் ஒருவனைக் கொன்றுவிட்டான். இதனைக் குலோத்துங்கனின் 15-ஆம் ஆண்டுக்குரிய தீர்த்தநகரி, திருவாலங்காட்டுக் கல்வெட்டுக்கள் கீழ்க்கண்டவாறு கூறுகின்றன.[22]

## தீர்த்தநகரி யாண்டு 15

"தென்னவர் வந்து அடிபணியச் சிங்களவர் தலை மறையாறத் தென்னீழம் கொள்கவென்ன திரைகடலை அடைக்க என்னத் தென் இலங்கையர்கோன் தலை அரிந்த திருநெடுமால் இவன் என்னத் தென்னவனைத் தலை அரிந்து தேசமெல்லாம் இருள் அகற்றி........"

## திருவாலங்காடு யாண்டு 15

"வாழ்வேங்கையும் மடமானும் வந்து ஒருதுறை நீருண்ணக் கோன் வேங்கைக் கொடி எடுத்துச் சுங்க மில்லா சோணாட்டில் சோற்றுமலை கண்டருளி தென் னவன் வந்தடி பணியச் சிங்களவன் தலை மறையாற தென்னீழம் கொள்கவென்ன திரைகடலை அடைக்க வென்ன பொன்னி சூழ் நாடெங்கும் தன்பெருநிலை நாற் றிசைக்கும் காவலனாக சேவலரு நெடுங்கொடியோன் திருக்கயிலைச் சிவன் அருளால் மேவலரைச் சதமடக்கி தனிச் சிங்கம் பெற்ற தனிமகன் கோன் தேசமெல்லாம் விளங்க........"

சிங்கள மன்னன் ஒருவனைக் குலோத்துங்கன் கொன்றுவிட்டான். இதனைச் சொல்லும்போது - "இராவணனைக் கொன்ற திருநெடுமால் போன்று குலோத்துங்கன் விளங்கினான்" என்று கல்வெட்டு நயம்படக் கூறுகிறது. இராவணனைக் கொன்றது இராமன் அல்லவா? அவ்வாறு இருக்க திருநெடுமால் போன்று எனக் குலோத்துங்கன் கூறுகிறானே! இது சரியா? குலோத்துங்கன் கம்ப இராமாயணம் படித்தவன். **"இப் பிறவியில் இருமாதரை சிந்தையாலும் தொடேன்"** என்று கம்ப இராமாயணத்தில் இராமன் கூறியுள்ளான். இராமனுக்கு ஒரே மனைவி; குலோத்துங்கனுக்கு இரு மனைவிகள் இருந்தனர். எனவே வீரத்தில் இராமனாக விளங்கிய குலோத்துங்கன் ஸ்ரீதேவி, பூதேவியுடன் கூடிய திருநெடுமால் போன்று இருந்தானாம். திருமாலின் அவதாரமே இராமபிரான். திருஉடை மன்னரைக்



கண்டால் திருமாலைக் கண்டேன் எனத் திருமங்கை ஆழ்வார் கூறுவதும் இங்கு நோக்கத் தக்கது. அரசனைத் திருநெடுமாலுக்கு இணையாக வணங்குவது அக் காலத்துத் தமிழ் நாட்டு மரபாகும்.

வீரபாண்டியனும் வாளாவிருக்கவில்லை. கேரள மன்னனுடன் சேர்ந்துகொண்டான். மீண்டும் குலோத்துங்கனுடன் போரிட வந்தான். இப்போரில் குலோத்துங்கன் வீரபாண்டியனைக் கொன்றுவிட்டான். கேரள மன்னனைத் தோற்கடித்து மன்னித்து அனுப்பினான். தாராசுரத்தில் இருந்து கிடைக்கும் குலோத்துங்கனின் கல்வெட்டு அவனி ஆண்டு சந்திர வருஷத்து பாண்டியனைத் தலையரிந்து எனக் கூறுகிறது. ஆட்சி ஆண்டு 17; இதன் காலம் 1195 ஆகும். இதனை மன்னனின் 17-ஆம் ஆண்டு திருமாளம் கல்வெட்டும் உறுதிசெய்கிறது.[23]

பாண்டியர் உள்நாட்டுப் போரின் முதல் கட்டத்தின் போது இளங்கோப் பருவத்திலிருந்த குலோத்துங்கன் குலசேகரனைக் (பூதலமடந்தை) கொன்றான் என்பதை முன்பே கண்டோம். குலசேகரனின் மாமன் மகனான கொங்கு வீரசோழன் குலோத்துங்கன்மீது பழி வாங்க முற்பட்டான். திருச்சிக்குத் தெற்கே உள்ள இரத்தின கிரியைப் பிடித்துக்கொண்டான்.[24] இவ்வூரை 'வீரசோழ வளநாட்டு வீர சோழ சதுர்வேதி மங்கலம்' என்றும் பெயரிட்டான். வெகுண்டெழுந்த குலோத்துங்கன் கொங்கு நாட்டின்மீது படையெடுத்தான். கொங்குச் சோழனை வென்றான். கருவூரில் வீராபிஷேகமும், விஜயாபிஷேகமும் செய்துகொண்டான். இதனால் 'மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன்' என அழைக்கப்பட்டான். இப்பெயர் இவனது 16-ஆம் ஆண்டு ஆட்சிக்குரிய அச்சுத மங்கலம் கல்வெட்டில் முதன்முதலில் காணப்படுவதால் இந்நிகழ்ச்சி 1194-இல் நடந்தது எனக் கொள்ளலாம்.[25]

குலோத்துங்கன் மூன்றாவது முறையாக இலங்கை மீது படையெடுத்தான். இதனை 25-ஆம் ஆண்டுக் குரிய கோவிலூர் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது. இதன் காலம் 1203 ஆகும். கல்வெட்டின் வாசகமாவது :[26]

"ஈழமண்டலம் எறிவதாக அங்கிருந்து திசைக்கருங் கடல்மீது தண்டேவிச் சென்று செருமலை ஆம் மண்டலத்தரசு நீக்கி அழகாய் சேனை அழிவித்து வேளை கொண்டு விரும்புதற்கு வீரன் தன் மார்பில் வேளை கொண்டு வந்த வேந்தனை பணிகொண்டு வெள்ளிப்பரி செல்லத் திருவுள்ளம் வைத்தருளி இலங்கா புரி அன்னாள் இருந்ததென நேகக் கேட்டருளி........

தமிழ் நாட்டு அரசியலில் தலையிட்டுத் தொல்லை கொடுத்துவந்த சிங்களவர்களை ஒருவாறு ஒழித்து விட்டான் குலோத்துங்க சோழன்.

## சடையவர்மன் குலசேகரன் (பூவின் கிழத்தி)

மாறவர்மன் விக்கிரமபாண்டியன் இறந்த பிறகு அவனுடைய மகனான சடையவர்மன் குலசேகர பாண்டியன் 1190-இல் முடி சூடினான். இவனது மெய்க்கீர்த்தி **'பூவின் கிழத்தி'** எனத் துடங்கும். என்ன காரணத்தினலோ இவனுக்கும் குலோத்துங்கனுக்கும் பிணக்கு ஏற்பட்டு 1203-இல் போர் மூண்டது. இப்போரில் குலசேகர பாண்டியன் தனது அரசி, மகனுடன் சரண் அடைந்தான். குலோத்துங்கன் அபயம் என்று வந்த குலசேகரனுக்குப் பட்டாடையும், திவ்வியாசனமும் அளித்து மரியாதையுடன் நடத்தினான். இதனைக் கோவிலூர் கல்வெட்டு யாண்டு 25 நயம்பட எடுத்துரைக்கிறது. அது வருமாறு :

"திறை இடாத் தென்னவன் மேல் தண்டேவத் திருவுள்ளமாய் வழு(தி) (நாடு) தனதாக்கி மதுரை நகர் திறைப்படுத்திப் பூண்ட பெரும்போரில் வென்று........ புகழ்மைந்தனைப் பேர்சாட்டி அபயமென்று வருதலால் அரசியாற் கையொடும் கூடவந்து வணங்குதலும் சினம்



மறந்து திருவுள்ளமாய்த் தென்னவனாமென மொழிந்து பட்டொளியும் திவ்யாசனமும் பரிசட்டமும் மிக நல்கி அரசும் ஆண்மையும் அவர்க்களித்து அணிமதுரை அவர்க்காக்கி விடைகுடுத்து.........."

1203-க்குப் பிறகு குலோத்துங்கனின் கடைசி நாட்களான 1218 வரை எவ்வித சம்பவங்களும் நிகழவில்லை.

பாண்டியரின் உள்நாட்டுப் போரில் நாம் ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். பராக்கிரம பாண்டியன், அவனது மகன் வீரபாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகியோர் தமக்குத் தேவையானபோது இலங்கையின் உதவியையோ அல்லது சோழரின் உதவியையோ நாடினார்கள். இந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் நம்பகமானவர்கள் இல்லை என குலோத்துங்கன் நிச்சயித்தான். இலங்கைக்கு விரோதமான பாண்டியகுடும்பம் ஒன்றைத் தேர்ந்து எடுத்தான். இதன் முதல் தலைவன் ஸ்ரீவல்லபன் ஆவான். இவனது சந்ததியாரே பிற்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டார்கள். இலங்கைக்கு விரோதமான குடும்பம் மதுரையில் அரசாள வேண்டும் என்பதே குலோத்துங்கனின் விருப்பம். அதனை வெற்றிகரமாக செய்து முடித்தான். ஆனால் அரசியலில் எதுவுமே என்றுமே நிலையானது அல்ல. பிற்காலத்தில் பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் பிணக்கு ஏற்பட்டு, அதனால் போசளர்கள் தலையிட்டனர். இவ்வரலாறு இந்நூலுக்கு அப்பாற்பட்டதால் இத்துடன் முடித்துக்கொள்வோம்.

## FOOT NOTES

1. N. Sethuraman - 'The Medieval Pandyas' - Page 108
2. Ibid - Page 119
3. Ibid - Page 99
4. N. Sethuraman - 'The Imperial Pandyas' - Page 21
   'The Medieval Pandyas' - Pages 49 & 122
   'The Cholas' - Page 113

5. E. I. XXXVI - Pages 23 to 32
6. S. I. I. VI - 456
7. Travancore Archaeological Series Volume II Page 18
8. S. I I VI - 438
9. E. I. XXII - 14 : 465/1905 ; 261/1925
10. Senkottai 307/1960 ; year 15, day 560 (year 16, day 195) with Prasasti Putala Madandai
11. N. Sethuraman - 'The Cholas' - Following in the foot steps of Kielhorn it was surmised that Kulothunga came to the throne in the month Adi (Karkataka) in 1178. Later discoveries prove that he came to the throne in the month Ani (Mithuna only) - N. Sethuraman - "The Hoysalas in Pandimandalam" paper presented in the 15th Annual Conference of the Epigraphical Society of India held at Anantapur in November 1988.
12. 316/1923 - Thirukkoshtiyur and 28/1924 Tirumalai records of Sadaiyavarman Vira Pandya both in year 11 ; 313/1923 Thirukkoshtiyur Sadaiavarma Kulasekara year 12 ; 375/1962 Kanur year 14 ;
13. I am thankful to Dr. K. V. Ramesh, Director of Epigraphy who was kind enough to send to me the transcript of the Prasasti.
14. N. Sethuraman - 'The Medieval Pandyas' - Page 141
15. do do - Page 151 ; Sermadevi record 648/1916 of Maravarman Vikrama Pandyaquotes year 8, Karkataka Su 4, Magha and Wednesday corresponding to 29th June 1188.
16. S. I. I. - III - (6
17. S. I. I. - III - 87
18. E. I. - XXXVI - 3
19. E. I. - XXXVI - 3
20. Thirukkannapuram 505/1922 year 11
21. 648/1916 Maravarma Vikrama ; Year 8
22. Thirthanagari S. I. I XVII 135 year 18; Thiruvalankadu 81/1926
23. Darasuram New discovery 1978-79 ; Tirumalam 112 of 1910
24. Ratnagiri 154/1914 of Vira Chola of Kongu
25. Achutamangalam 397/1925 ; Year 16
26. & 27. 183/1908 ; Year 25

# சங்கர சோழன் உலா

'சங்கர சோழன் உலா' என்னும் பிரபந்த நூல் பழைய சுவடியில் எழுதப்பட்டு இருந்தது. இதனை சென்ற நூற்றாண்டின் கடைப்பகுதியில் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் கண்டெடுத்தார். 1926-இல் கோபிநாதராவ் அவர்கள் கலிங்கத்துப் பரணி, மூவர் உலாக்களோடு சங்கரசோழன் உலாவை ஒப்பிட்டு எபிகிராபியா இண்டிகா தொகுதி 18-இல் பக்கம் 28-இல் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்கள். இவ்வுலா தஞ்சை சோழர்களைப் பற்றியது என்றும் கூறியுள்ளார். ஆனால் அன்றைய நிலையில் கோபிநாத ராவ் அவர்களுக்குப் பாட்டுடைத் தலைவனை அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. 1977-இல் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இவ்வுலாவை வெளியிட்டுள்ளார்கள். ஒரு ஊகத்தின் அடிப்படையில், சங்கர சோழன் உலாவின் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் குலோத் துங்க சோழனின் (1178-1218) தம்பியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார். குலோத்துங்கனுக்கு ஒரு தம்பி இருந்ததாக வரலாறே இல்லை. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் கருத்து சரித்திர நிகழ்ச்சிகளுக்கு ஒத்து வரவில்லை. இந்தப் பின்னணியில் சங்கர சோழன் உலாவைப் பார்ப்போம். இன்றைய நிலையில் இந்நூல் கிடைப்பது அரிதாக உள்ளதால் உலாவின் சில முக்கிய மான பாடல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## காப்பு

சங்கமன் தந்த தமிழ்ச் சங்கர சோழ
துங்கமன் மீது உலாச் சூட்டவே — அங்கேழ்
அரக்கிளவி நாயகனும் ஆனையாம் தேன்ஆ
கரக்கிளவி நாயகனும் காப்பு*

1. நீர்பூத்த வண்ணத்து நேமி திருமகன்கை (விஷ்ணு)
ஏர்பூத்த வையகம் ஈரேழும் - தார்பூத்த (பிரம்மன்)

* விநாயகப் பெருமானுக்கும் முருகனுக்கும் காப்பு

2. தண்டு கவரத் தனது தூடைக் கீழ்அடையக்
கண்டு மனுவரம்பு கண்டோனும் - மண்டலமும் (மனு)

3. வெம்மலைக் கோடு வலனோடும் வெய்யோனும் (சூரியன்)
செம்மலைப் பண்டுர்ந்த தேரோனும் - எம்மறிக்கும்
(மனுநீதிச்சோழன்)

4. இம்பர் அடுபுலிக்கும் ஒக்கநீர் ஈந்தோனும்
உம்பர் விமானம் உகைத்தோனும் - வெம்போகம்
(மாந்தாதா)

5. மிக்க புரந்தரன்ஊர் வேந்தனும் அக்கூற்றுக் (ககுத்தன்)
கொக்க வழக்கன் றுரைத்தோனும் - திக்கனைத்தும்
(பெருநற்கிள்ளி)

6. தாங்கி முதுமக்கட் சாடியமன் படைபின் (சுரகுரு)
வாங்கி ஒளிப்ப வகுத்தோனும் - தூங்கிய

7. தாழ்கடகம் அன்றெறிந்த தக்கோனும் மேல்கடலைக்
கீழ்கடல் வாய்விடுத்த கிள்ளியும் - ஏழ்கடல்
(சமுத்திரஜித்)

8. மண்ணைப் புணர்ந்த முடியுடை மாநாகர்
பெண்ணைப் புணர்ந்த பெருங்கோவும் - பண்ணிய
(சூரவாதித்தன்)

9. பாயிரம் பெற்றதொரு பாட்டுக்குப் பன்னொருநூ
றாயிரம் பொன்பணித்த அண்ணலும் - சேயதொரு

10. பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு (கரிகாலன்)
கோடி பசும்பொன் கொடுத்தோனும் - ஓடித்

11. திருநிறை தன்அடைந்த செந்தாட் புறவப் (சிபிச்சக்கர
பெருநிறை புக்க பிரானும் - பொருபொன்னிப் வர்த்தி)

12. பேரா றருகு பெருகக் குடகூடற் (கவேரராஜன்)
றோராறு கண்ட உரவோனும் - ஈரருகும்

13. எண்கரை செய்யா தெரிதிரைக் காவிரிக்குத் (கரிகாலன்)
தண்கரை செய்த தராபதியும் - திண்கனக

14. வெங்கைக் களவழிப் பாடலுக்கு வில்லவனைக்
கொங்கைத் தளைகளைந்த கோமானும் - செங்குருதி
(கோச்செங்கட்சோழன்)

15 புண்ஊறு தன்திரு மேனியில் பூணாகத்
தொண்ணூறு மாறும் சுமந்தோனும் - கண்ணுதலோன்
(விஜயாலயன்)



16. நாடகத்தால் ஆனதிரு ஞானத் திருமன்றம்
ஆடகத்தால் வேய்ந்த அபயனும் - ஊடிய (பராந்தகன்)

17. சிந்தனைக் கேரள நாடொரு நாள்சிந்திச்
சந்தனைப் பார்த்த தகவோனும் - சிந்துரத்தைக்
(இராஜராஜன்)

18. காந்தரிக் கொப்பக் கடாரமும் கங்கையுங்கொண்
டேந்தரிப் பீடத் திருந்தோனும் - போந்தெரியிற்
(இராஜேந்திரன்)

19. கொல்யானைத் தானை கொடுமும் மடங்குபோய்க்
கல்யாணம் அட்ட தனிக் காவலனும் - நல்யானை
(இராஜாதிராஜன்)

20. ஒன்றா யதுபிணிப்பக் கொப்பத் தொருதடக்கைக்
குன்றா யிரம்பண்டு கொண்டோனும் - மன்றலம்
(இராஜேந்திரதேவன்)

21. காப்பனைக் கோயிற் கருமுகிற்கு மாணிக்கப்
பாப்பனை செய்தளித்த பார்த்திபனும் - காப்பரணக்
(இராஜமகேந்திரன்)

22. கூடல சங்கமத்துக் குஞ்சரம் பல்கோடி
ஆடலம் பொற்பரணிக் கட்டோனும் - கூடலார்
(வீரராஜேந்திரன்)

23. உம்பர் அணிபொள்ளக் கொல்வித் தொருகலிங்க
வெம்பரணி கொண்ட விறலோனும் - செம்பதத்துக்
(குலோத்துங்கன்)

24. கூடிய சீர்தந்த என்றெடுத்த கூத்தன்உலாச்
சூடிய விக்கிரம சோழனும் - பாடிய (விக்கிரமசோழன்)

25. வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலைப் பெற்றோனும் - தெள்ளியதன்
(குலோத்துங்கன் II)

26. முன்நாய கரின்அவன் மூதுலாக் கண்ணிதொறும்
பொன்ஆ யிரம்சொரிந்த பூபதியும் என்னுமிவர்
(இராஜராஜன் II)

27. மாசக்ரம் மேருவலம்செல் மகரசல
பூசக்ரம் ஏழும் புரந்ததற்பின் - தேசம்

28. பணியும் மனுகுலப் பாற்கடல் ஈன்ற
மணியும் அமுதமும் மானக் குணபால்

29. உவந்த வளவர் குலவசலத் துச்சி
நிவந்த பருதி நிகர்ப்ப - அவந்திமன்

30. வங்கமன் சுங்கமன் ஆதியவர் வந்தித்த (காலஞ்சென்ற
சங்கமன் தொல்லைத் தவம்போலப் - பங்கா சங்கமன்)

31. எழுந்திகிரி வெற்பை எனத்திகிரி யும்தன்
செழுந்திகிரி யின்திமிரம் தீர்ப்ப - மொழிஅனைத்தும்

32. வல்லமன் ஆதிமனுவினும் மேதக்க
நல்லமன் என்கின்ற நாயகற்கும் - தொல்லை
(சங்கமனின் மகன் நல்லமன்)

33. மலைக்குங் கடற்குநடு மண்முழுதுங் காத்துச்
சிலைக்கும்பா தாளத்தைச் சீறித் - தொலைத்துப்

34. பருந்து நிழற்பந்தர்ப் பல்லா யிரம்பேய்
விருந்து களிப்ப விடுத்துக் - கருந்தலையின்

35. குன்று குவித்துக் குவித்த பிணக்குவடு
சென்று குருதித் திரைமிதப்ப - வென்றதற்பின்

36. பூசக் குடகடற்கே போர்வாட் கறைகழுவித்
தேசத் தொழியாத் திறைகொண்டு - காசினிக்கே

37. பைத்த பொருகொடியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கும் - மெய்த்துணையாய்த்
(சங்கமனின் மகன் குமார மகீதரன்)

38. தோற்றிய சங்கர ராசன் சுரராசன்
போற்றிய கங்கா புரராசன் (பாதுகாவலன் சங்கரராசன்)

கண்ணிகள் : 91, 128, 252, 289, 291, 386 முதல் 389

91. ஈழத் தவர்முதலோர் எண்இறந்த மாக்கடலும்
வேழத் தெறிகடலும் மேற்போத (ஈழம்)

128. தென்னர் நிமித்தம் மறைந்தென்னக் செம்முகமும்
முன்னர் விழிக்கலுழி மூழ்குவார் (பாண்டியர்கள்)

253 அனுராச மாபுரிஓர் ஆணைகொண்டு கொண்ட
மனுராச ராசன் வரலும் (இலங்கையில் அனுராதபுரி)

289. கைதவன் வானவன் கைஅம்பில் மைஅம்பை
எய்தவன் சோனாட் டிறைவன் (பாண்டியரும் சேரரும்)

291. மதுரை பொருதிட்ட வாமுரசு ஓதை
வெதிரை அடுதோளி வேட்டாள் (மதுரை)



கடைசி நான்கு செய்யுட்கள் 386 முதல் 389 வரை

386. சூட்டினான் ஆரத் தொடலை அருட்கடலை
ஆட்டினான் இன்னல் அகற்றினான் - வேட்டுப்

387. பருவத் தெழுவகைமைப் பாவையர்எல் லோரும்
தெருவத் தினைய திளைப்பப் - பரணி

388. கவியாற் செயங்கொண்டான் கட்டுரைப்பக் கொண்டா
குவியாக் கரத்தரசு கொண்டான் - கவிதை [ன்
(கலிங்கத்துப்பரணி)

389. நிலாக்கொண்டான் கூத்தன் நிகழ்த்த ஒருமூன்
றுலாக்கொண்டான் போந்தான் உலா
(மூன்று உலாக்கள்)

சங்கர சோழன் உலா ஒட்டக்கூத்தரின் மூவருலா போன்று சோழர்களின் சூரிய வம்சத்துப் பாரம்பரியத் துடன் துடங்குகிறது. விஷ்ணு, பிர்ம்மா, சூரியன், மனுநீதிச் சோழ,ன் மாந்தாதா, கருத்தன் என்று தஞ்சைச் சோழர்களின் குலமுதலோர் கூறப்படுகின்றனர். பின்பு பெருநற்கிள்ளி, சமுத்திரஜித், உருத்திரங்கண்ணனுர் பாடிய ஒவ்வொரு பாடலுக்கும் பதினாயிரம் கோடி பொன் கொடுத்த கரிகால சோழன், சிபிச் சக்கரவர்த்தி, கவேரராஜன், காவிரி நதிக்குக் கரை கட்டிய கரிகால சோழன், கோச்செங்கட்சோழன், ஆகியவர்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. கண்ணி 15 முதலாக 26 வரை வரலாற்றில் இடம் பெறும் சோழப் பேரரசர்கள் குறிப் பிடப்படுகின்றனர். அவர்கள் முறையே, தொண்ணூற் றாறு புண்களை உடலில் சுமந்தும் போரில் வெற்றி பெற்ற விஜயாலயன், அவனது பேரனும் தில்லை சிதம்பரம் நடராசர் கோயிலுக்குப் பொன் வேய்ந்தவனு மாகிய பராந்தக சோழன் (907-954), பராந்தகனின் கொள்ளுப் பேரனும் கேரளத்தை வென்றவனுமாகிய முதலாம் இராஜராஜன் (985-1014); இவனது மகனான கங்கையும் கடாரமும் கொண்ட இராஜேந்திர சோழன் (1012-1044); இவனது நான்கு பிள்ளைகளான

முறையே கல்யாணபுரம் கொண்ட இராஜாதி ராஜன் (1018-1054); கொப்பத்துப் போரில் வெற்றி கண்ட இராஜேந்திர தேவன் (1052-1063); ஸ்ரீரங்கம் அரங்க நாதப் பெருமாளுக்குப் பாம்பணை செய்த இராஜ மகேந்திரன் (1059-1063); கூடல் சங்கமத்துப் போரில் வெற்றியடைந்து பரணி நூலில் பாடப்பட்ட வீரராஜேந்திரன் (1063-1070) ஆகியோரும்; வீரராஜேந்திரனின் சகோதரியின் மகனும் கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவனுமான முதல் குலோத்துங்கன் (1070-1122); இவனது மகனும், ஒட்டக்கூத்தரின் உலாவில் 'கூடிய சீர்தந்த' என்ற துடக்கத்தைக் கொண்ட விக்கிரம சோழனும் (1118-1135); இவனது மகனும் ஒட்டக்கூத்தரின் உலாவிலும் பிள்ளைத்தமிழிலும் புகழப்பட்டோனும் ஆகிய இரண்டாம் குலோத்துங்கனும் (1135-1150); இவனது மகனும் புலவர்களுக்குக் கண்ணிதோறும் ஆயிரம் பொன் சொரிந்த பூபதியான இரண்டாம் இராஜராஜனும் (1146-1173) ஆவார்கள். கண்ணி 27-லிருந்து 39 வரை இவர்கள் எல்லோரும் மறைந்தனர் எனக் கூறிவிட்டு கண்ணி 30-இல் சங்கமன் தொல்லைத் தவத்தால் வந்துதித்த புதல்வர்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றனர். 'தொல்லைத் தவத்தால்' என இறந்த காலத்தில் கூறுவதால் சங்கமன் உயிருடன் இல்லை என்பதை அறியலாம். காலஞ் சென்ற அரசர்களின் வரிசையில் கடைசியாக மறைந்தவன் இரண்டாம் இராஜராஜனாவான். அவனது புதல்வர்களைப் பற்றிக் கூறாமல் சங்கமனின் புதல்வர்களைப் பற்றிக் கூறுவதால், இராஜராஜனே சங்கமன் என்பதை அறியலாம். கண்ணி 27-லிருந்து 37 வரை இராஜராஜனாகிய சங்கமனின் இரு புதல்வர்களும் கூறப்படுகின்றனர். அவர்களுள் மூத்தோன் மொழி அனைத்தும் வல்லமன்; ஆதி மனுவிற்கும் மேதக்க நல்லமன் என்ற நாயகன் ஆவான். இளையோன் பூசற்குடற் கடற்கே சென்று போர்வாள் கறை கழுவிய குமார மகீதரன் ஆவான். கண்ணி 38-இல் இப்புதல்வர்கள் இருவருக்கும் மெய்த்துணை



யாய் தோற்றிய சங்கரராஜன் - கங்கை கொண்ட சோழபுரத்து மன்னன் - பாட்டுடைத் தலைவன் எனக் கூறுகிறார் ஆசிரியர். **'மெய்த்துணையாய் தோற்றிய'** என்ற தொடருக்கு உண்மையான பாதுகாவலன் *(Guardian)* எனப் பொருள் கொள்ளவேண்டும். கடைசி கண்ணி 389 இப்பாட்டுடைத் தலைவனது முன்னோர்கள் செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியிலும், ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட மூவருலாவிலும் போற்றப்பட்டவர்கள் எனவும் கூறுகிறது. இவர்கள் முறையே முதற் குலோத்துங்கன் (1070-1122); விக்கிரம சோழன் (1118-1135); இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150); இரண்டாம் இராஜராஜன் (1146-1173) ஆகிய மன்னர்கள் ஆவார்கள். இராஜராஜனுக்குப் பிறகு ஆண்ட சோழ மன்னன் இரண்டாம் இராஜாதி ராஜன் ஆவான். இவனே பாட்டுடைத் தலைவன் என்பதை எளிதில் அறியலாம். இவனை இராஜராஜனே முடிசூட்டி வைத்தான் என்று பல்லவராயன் பேட்டை சாசனம் கூறுகிறது. இச்செய்தி உலாவின் காப்பில் கூறப்படும் 'சங்கமன் தந்த சங்கரன்' என்னும் செய்தியோடு ஒத்துவருவதையும் காணலாம். உலாவின் ஆசிரியர் இரண்டாம் இராஜாதிராஜனை சங்கரன் என்ற புனைபெயரில், அழைக்கிறார். இனி சரித்திர நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பார்ப்போம்.

கி. பி. 1146-இல் இரண்டாம் இராஜராஜன் முடிசூடினான். வெகு நாட்களுக்குப் பிறகு மன்னனுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுக்கு ஒரு வயதும் இரு வயதும் இருக்கும் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் ஏற்பட்டன. மந்திரியான பெருமான் நம்பிப் பல்லவரையன் பிள்ளைகளை இராஜராஜபுரத்து அரண்மனையில் பாதுகாப்பாக வளர்த்தான். நாட்டிலிருந்த குழப்பங்களை நீக்கினான். நாட்டில் அமைதி நிலவிற்று. இச்சமயம் இராஜராஜன் நோய்வாய்ப்பட்டான். அவனது இரு புதல்வர்களும் சிறுவர்களாக இருந்தார்கள். தான் இறந்துவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தான்.

17421

தனது மந்திரியான பெருமான் நம்பிப் பல்லவரையனிடம் ஆலோசனை கேட்டான். மந்திரியின் விண்ணப்பத்தின் படி முன்னாளில் காரியம் இருந்தபடி விசாரணை செய்து செயல்படத் துவங்கினான். அதாவது அக்காலத்தில் வீர ரராஜேந்திர சோழன் (கி. பி. 1070) நோய்வாய்ப்பட்டு இருந்தான். அவனது மகன் அதிராஜேந்திர சோழனுக்கும் வாரிசுகள் இல்லை. எனவே, வீரராஜேந்திரன் முன் எச் சரிக்கையாகத் தனது சகோதரியின் மகனாகிய முதற் குலோத்துங்கனுக்கு முடி சூட்டினான். வீரராஜேந்திரன் இறந்தபின், அதிராஜேந்திரனும் வாரிசுகள் இன்றி இறந் தான். எனவே, வீரராஜேந்திரரின் சகோதரி மகனாகிய முதல் குலோத்துங்கன் முன்னமேயே முடி சூட்டப்பட்டு இருந்ததால் சோழ மாமன்னன் ஆனான். குலோத் துங்கன் இரண்டாம் இராஜராஜனின் கொள்ளுப்பாட்டன் அல்லவா? எனவே, இராஜராஜனும் முன்னவர் வழியைப் பின்பற்றித் தனது சகோதரி நெறியுடைப் பெருமாவின் மகனான எதிரிலிப் பெருமாளுக்கு இராஜாதி ராஜ சோழன் எனப் பெயரிட்டு முடி சூட்டி வைத்தான். இம்முடி சூட்டு விழா கி. பி. 1166 ஆடி மாதத்தில் நிகழ்ந்தது. 1173-இல் இராஜராஜன் இறந்தான். சில நாட்களில் பல்லவராயனும் இறந்தான். இச்சரித்திர நிகழ்ச்சிகளை இராஜாதி ராஜன் தனது எட்டாம் ஆட்சி யாண்டு கி. பி. 1174-க்கு உரிய பல்லவராயன்பேட்டைக் கல்வெட்டில் விரிவாகக் கூறியுள்ளான். நான்கு ஆண்டுகள் கழித்து 1178-இல் இராஜாதிராஜன் மூன்றாம் குலோத்துங்கனுக்கு முடி சூட்டினான். இரு வரும் நான்கு ஆண்டுகள் இணைந்து அரசாண்டனர். பின்பு இராஜாதி ராஜன் ஆந்திரம் சென்று கி. பி. 1216-இல் மறைந்தான்.


இச்செய்திகளில் நாம் ஒன்றை நன்றாகக் கவனிக்க வேண்டும். இராஜாதிராஜன் 1166-இல் முடி சூடு வதற்கு சில ஆண்டுகளுக்கு முன், இராஜராஜனின் இரண்டு பிள்ளைகள் ஒரு வயதும் இரு வயதும் உடைய வர்களாக இருந்தார்கள் என 1174-க்கு உரிய இராஜாதி ராஜனது கல்வெட்டில் கூறப்படுவதால், 1174-இல் மன் னனின் பிள்ளைகள் இளம் வயதினர்களாக இருந்தார்கள் என அறியலாம். இல்லாவிடில் இருமகன்களைக் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. நான்கு ஆண்டுகள் கழித்து மூன்றாம் குலோத்துங்கன் முடி சூட்டப்படுவதால் குலோத்துங்கனே இராஜராஜனின் மகன் என்பதை அறியலாம். பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டில் மன்னனின் மைந்தர்கள் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு வயதும் இரு வயதும் உடையவர்களாக இருந்தார்கள் எனக் கூறும் இராஜாதிராஜன் இளையவனை முன் மொழிந்து மூத்தவனைப் பின் மொழிகிறான். இச் செய்தியை கி. பி. 1174-இல் கூறுவதால் நான்கு ஆண்டுகள் கழித்து 1178-இல் முடி சூட்டப்பட்ட மூன்றாம் குலோத்துங்கன் இராஜராஜனின் இரண்டாவது மகன் என்பதை அறியலாம். 1173 முதல் 1182 வரை இராஜராஜனின் இரு புதல்வர்களுக்கும் பாதுகாவலனாக இருந்தான். இச்செய்தியை உலாவும், இராஜராஜனது இரு புதல்வர்களுக்கும் மெய்த்துணையாய்த் தோற்றிய சங்கரராஜன் *(Guardian)* எனக் கூறுகிறது. மூத்தவன் பல கலைகள் படித்த அறிவாளியாக விளங்கி அரசுரிமை ஏற்கவில்லை என்றும், இரண்டாம் மகனாகிய குமார மகீதரன் (குலோத்துங்கன்) அரசனாக விளங்கினான் எனவும் உலா கூறுகிறது.



தொகுத்து நோக்கினால், கி. பி. 1146 முதல் 1173 வரை இரண்டாம் இராஜராஜன் ஆட்சி புரித்தான். அவனது இரு புதல்வர்களும் சிறுவர்களாக இருந்ததால் இராஜராஜன் தனது சகோதரி நெறியுடைப் பெருமாவின் மகனாகிய எதிரிலிப் பெருமாளுக்கு 1166-இல் இராஜாதி ராஜன் எனப் பெயரிட்டு திரு அபிஷேகம் செய்தான். இராஜராஜன் 1173-இல் இறந்தான. அரசனது இரு புதல்வர்களுக்கும் இராஜாதிராஜன் மெய்த்துணையாய் விளங்கி, 1178-இல் இராஜராஜனது இரண்டாம் மக னாகிய குலோத்துங்கனுக்கு முடி சூட்டினான். இராஜ ராஜனது மூத்த மகன் அரசுரிமை ஏற்காது சமயப்பற்று கொண்டவனான் என்ற உண்மைகளை அறியலாம்.

சங்கர சோழன் உலாவில் சில சரித்திர நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. 1176-இல் இராஜாதி ராஜனின் படைத்தளபதியான அண்ணன் பல்லவரையன் ஈழ நாட்டின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தி அந்நாட்டின் வட பகுதியைத் தீக்கிரையாக்கினான். இச்சரித்திர நிகழ்ச்சியை 91, 92, 93 ஆகிய கண்ணிகள் விளக்கும். கண்ணி 253 ஓர் ஆணைக் கொண்டு (அண்ணன் பல்லவரையன்) ஈழத்து அனுராதபுரம் அழிக்கப்பட்டது என்பதைக் கூறுகிறது. இராஜாதி ராஜன் பாண்டியர் களை வென்ற நிகழ்ச்சிகளை கண்ணிகள் 128, 147, 247, 334, 339, 366, 367 ஆகியவை சித்தரிக்கக் காணலாம். ஈழத்தையும் பாண்டியர்களையும் வென்ற இராஜாதி ராஜனை 'ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய இராஜாதி ராஜன்' எனக் கல்வெட்டுக்கள் அறிமுகப்படுத்துகின்றன. இராஜாதி ராஜன் 1182 வரை சோழ நாட்டை ஆண்டு, பிறகு ஆந்திரம் சென்றதால் உலா இயற்றப்பட்ட காலம் கி. பி. 1182 எனக் கொள் ளலாம். மாமனால் அளிக்கப்பட்ட சோழ சாம்ராஜ்யத்தை மாமனின் மகனிடமே திருப்பி அளித்த இராஜாதி ராஜனுக்கு சோழ நாடு வழங்கிய பரிசு சங்கர சோழன் உலா எனலாம். சங்கர சோழன் உலாவின் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. ஆசிரியர் பலவிடங்களில் ஒட்டக்கூத்தரைப் புகழ்வதால், அவர் கூத்தரின் புதல்வர் அல்லது பேரர் அல்லது அன்பிற்குரிய மாணவராகவும் இருக்கலாம் என ஊகிக்கவே முடிகிறது. ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் வீரசைவத்தைப் பெரிதும் கையாண் டுள்ளார். திருஞானசம்பந்தர் முருகனின் அவதாரம் என வீர சைவர்கள் கூறுவதைக் கூத்தரும் தக்கயாகப்பரணி யில் உரைத்துள்ளார். வாழ்த்துப் பகுதியில் குடந்தைப் பெரிய மடத்து வீர மாகேச்வரர் வாழியவே! எனக் கூறுகிறார். சங்கர சோழன் உலாவில் ஆசிரியர் ஒட்டக் கூத்தரைப் பின்பற்றுவதால் சங்கமன், சங்கரன் எனப்படும் வீர சைவர் பெயர்களை இராஜராஜனுக்கும், இராஜாதி ராஜனுக்கும் அளித்துள்ளார்.






## பழைய விளக்கங்களும் - சிக்கல்களும்

1926-இல் எபிகிராபியா இண்டிகா தொகுதி 26-இல் கட்டுரை 4-இல் கோபிநாதராவ் அவர்கள், கலிங்கத்துப் பரணி, மூவர் உலா, சங்கர சோழன் உலா ஆகியவைகளை ஒப்பிட்டார். சங்கர சோழன் உலா தஞ்சைச் சோழர்களைக் குறிப்பிடுகிறது எனக் கூறினார். இரண்டாம் குலோத்துங்கன் வரை அரசர்களை அடையாளம் கண்டார். அடுத்து ஆண்டவர்கள், கண்ணி தோறும் பொன் ஆயிரம் சொரிந்த பூபதியும், சங்கர ராஜனும் என்றார் (பக்கம் 30). இவர்கள் இரண்டாம் இராஜராஜனும், இரண்டாம் இராஜாதிராஜனும் ஆவர் என்பதை கோபிநாதராவ் அவர்களால் கண்டுபிடிக்க இயலவில்லை. அவர் ஆய்வு செய்த 1926-இல் சோழர்களின் வரலாறு, காலக்கணிப்பு, வம்சாவளி ஆகியவை சரியாக வரையறுக்கப்படாததால், கோபிநாத ராவ் அவர்கள் உலாவில் சொல்லியபடியே கடைசி இரண்டு மன்னர்களைப் பற்றிக் கூறி அத்துடன் நிறுத்திவிட்டார்.

1941-இல் மூன்றாம் குலோத்துங்க சோழன் என்ற நூலில் இராமச்சந்திர தீக்ஷிதர் ஆய்ந்துள்ளார். அவர் பல்லவராயன் பேட்டை சாசனத்தோடு உலாவை ஒப்பிட்டுப் பார்த்துக் கீழ்க்கண்டவாறு வம்சாவளியைக் கூறினார்.






பல்லவராயன் பேட்டை சாசனத்தில் இராஜராஜனுடைய புதல்வர்கள் குறிப்பிடப்படுகின்றனர். அவர்கள் சங்கமனின் குமாரர்கள் என தீக்ஷிதர் கூறினார். ஆனால் இராஜராஜனும் சங்கமனும் ஒருவரே என்பதை தீக்ஷிதரால் கணிக்க முடியாமற் போயிற்று. மேலும், நல்லமன், குமார மகீதரன் இருவர்களுக்கும் "மெய்த்துணையாய்த் தோற்றிய" சங்கரனை சகோதரன் எனக் கொண்டார். மெய்த்துணையாய்த் தோன்றிய என உலாவில் கூறப்படவில்லை. மெய்த்துணையாய்த் தோற்றிய (பாது காவலன்) என்றே கூறப்பட்டுள்ளது. உலாவின் கடைசி இரண்டு கண்ணிகளையும் (388-389) கவனித்து இருந்தால் உலாவின் பாட்டுடைத் தலைவன் இராஜாதிராஜன் என்பதை நிச்சயமாகக் கூறியிருப்பார். 1941-இல் சோழர் வரலாறு, காலக் கணக்கீடு, வம்சாவளி ஆகியவை முற்றிலும் சரியாக வரையறுக்கப்படாததால் உலாவிற்கு உரிய விளக்கத்தைக் கொடுக்கமுடியவில்லை.

### மு. இராகவ அய்யங்கார்

ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்த சங்கர சோழன் உலாவையும், குலோத்துங்க சோழன் கோவையையும் இராகவய்யங்கார் அவர்கள் படித்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1904-5 செந்தமிழ்த் தொகுதி மூன்றில் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்கள். இன்று இந்நூல் கிடைக்கவில்லை. இராகவய்யங்கார் என்ன எழுதினார் என்று அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. இருப்பினும் நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள் இராகவய்யங்காரது ஆய்வின் அடிப்படையில் தமது கருத்தைக் கூறியுள்ளார்கள். இனி சாஸ்திரியாரது கருத்தைப் பார்ப்போம்.

### நீலகண்ட சாஸ்திரியார்

குலோத்துங்க சோழன் கோவையில் பாட்டுடைத் தலைவனின் வம்சாவளி கீழ்க்கண்டவாறு உள்ளது என்ற கருத்தை சாஸ்திரியார் அவர்கள் கூறினார்கள்.

சங்கம ராஜன்

நல்லமன் | குமார குலோத்துங்கன் | சங்கரசோழன்

மேற்கண்டவாறு கோவையில் சொல்லப்படவே இல்லை என்பதை அடுத்த கட்டுரையில் காணப் போகிறோம். சங்கமன் மகனே குலோத்துங்கன் எனக் கோவையில் உள்ளது. எனவே, குலோத்துங்க சோழன் கோவையை சாஸ்திரியார் படித்தாரா அல்லது மற்ற வர்கள் கூறியதையே குறிப்பிட்டுள்ளாரா என அறியக் கூடவில்லை.

"மேலும் சங்கர சோழன் உலா என ஒன்றுள்ளது. அதில் சங்கர சோழனின் அண்ணன் குமார மகீதரன் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, உலாவும் கோவையும் கூறும் குமார மகீதரனாகிய குலோத்துங்கனே மூன்றாம் குலோத்துங்கன் எனக் கொண்டால் - மூன்றாம் குலோத் துங்கனது கல்வெட்டுக்களில் காணப்படும் சரித்திர நிகழ்ச்சிகளைக் கோவையும் உலாவும் கூறவில்லையே" என்றார்.

அடுத்த கட்டுரையில் கோவையை ஆராயப் போகிறோம். மூன்றாம் குலோத்துங்க சோழனது கல் வெட்டுக்களில் சொல்லப்படும் சரித்திர நிகழ்ச்சிகள் அப்படியே கோவையில் கூறப்படுவதைக் காணலாம். சங்கரன் என்பது இரண்டாம் இராஜாதி ராஜன் ஆவான். எனவே, இவனுக்குரிய நூலில், இவனுக்குப் பிறகு அரசாண்ட குலோத்துங்கன் காலத்துச் சரித்திர நிகழ்ச்சி களைக் காணுவதற்கில்லை.

நீலகண்ட சாஸ்திரியார் முதன் முதலில் சோழர்களின் வரலாற்றைக் கோர்வையாக எழுதி ஒரு வட்டத்துக்குள் அமைத்தார். அவரால் எழுதப்பட்ட 'சோழர்கள்' எனப் படும் நூல் (ஆங்கிலம்) 1936-இல் வெளிவந்தது. அதே நூல் 1975 வரை பல பதிப்புகளாக வெளிவந்துள்ளது. எனவே, பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங் களைக்கொண்டு மறுபரிசீலனை செய்ய வாய்ப்பில்லாமல்



போயிற்று. சாஸ்திரியார் அவர்கள் 1976-இல் கால மானார்கள். நாற்பது ஆண்டுகளின் இடைவெளியில் சோழர் வரலாற்றிற்கு புதிய வடிவம் தருவதற்கு - சாஸ் திரியார் அவர்களுக்கு என்ன காரணத்தால் இயலாமல் போயிற்று என்பது வியப்பாகவே உள்ளது. மேலும் சங்கர சோழன் உலா, குலோத்துங்கன் கோவை - இவைகளை சாஸ்திரியார் அவர்களே படித்திருந்தால் நிச்சயமாக உண்மை வரலாற்றை எழுதியிருப்பார். மற்றவர் எழுதியதை மேற்கோள் கொண்டதால் சாஸ்திரியாரது கருத்து அவரது சொந்தக் கருத்தாகக் காணப்படவில்லை.

## பண்டாரத்தார்

1949-இல் பண்டாரத்தார் அவர்கள் சோழர் வர லாற்றைத் தமிழில் எழுதினார்கள். சங்கர சோழன் உலாவைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள். இரண்டாம் இராஜராஜனுடைய வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது - உலாவின் கண்ணி 26-ஐ மேற்கோள் காட்டி இராஜராஜன் கண்ணிதோறும் ஆயிரம் பொன் சொரிந்த பூபதி என்றார்.

ஆனால் மூன்றாம் குலோத்துங்கனைப் பற்றி எழுதும் போது சங்கர சோழன் உலா கொங்குச் சோழர்களைப் றபறியது என்றார். அன்னாரின் கூற்று முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. குலோத்துங்கன் கோவையும் கொங்குச் சோழர் பற்றியது என்றார். அடுத்த அத்யா யத்தில் குலோத்துங்கசோழன் கோவையின் பாட்டுடைத் தலைவன் மூன்றாம் குலோத்துங்கன் என்பதைக் காணப் போகிறோம்.

சாஸ்திரியாரும், பண்டாரத்தாரும் சோழர் வர லாற்றை எழுதுங் காலத்து - உலாவிற்கும் கோவைக்கும் சரியான பொருள் கொள்வதற்கு முடியாத சிக்கலான நிலை இருந்தது. உண்மையில் அவர்கள் இரண்டு பிரபந்த நூல்களையும் நேரிடைப் படித்தார்களா என்பது புரியாத புதிராக உள்ளது. ஆய்வின் அடிப்படையில்

இவைகளைக் குறிப்பிட வேண்டியுள்ளதே தவிர - சாஸ்திரியாரும் பண்டாரத்தாரும் சோழர் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ஆற்றிய பணிகளை எள்ளளவேனும் குறைத்து எடை போடுவதற்கு இல்லை. அவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானதாகும்.

## கி. வா. ஜகந்நாதன்

காலஞ்சென்ற ஜகந்நாதன் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேரறிஞர்; புலவர்; தமிழ் மொழியில் அவருக்கு இருந்த ஆழ்ந்த அறிவை எத்துணை அளவு புகழ்ந்தாலும் தகும். 1977-இல் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சங்கர சோழன் உலாவை வெளியிட்டார். ஏனோ அதற்கு சங்கர இராசேந்திர சோழன் உலா' எனப் பெயரிட்டார். அன்னாருக்கு வரலாற்றில் அடிப்படை ஆய்வுப் பயிற்சி *(Fundamental Historical Research experience)* அதிகம் இல்லாத காரணத்தால் - இதற்கு முன் சோழர்களைப் பற்றி எழுதிய ஆசிரியர் அனைவரையும் குறிப்பிட்டு எழுதினார். இதனால் முடிவில்லாத சிக்கல்களையே *(Point of no return)* உருவாக்கும் ஒரு நிலைக்கு உந்தப்பட்டார்.

ஜகந்நாதன் அவர்களும் உலாவின் கண்ணி 38-இல் மெய்த்துணையாய்த் தோற்றிய சங்கரன் என்பதைத் 'தோன்றிய' எனக் கொண்டு, நல்லமன், குமார மகீதரன் ஆகியோருக்கு சங்கரன் சகோதரன் என்றார். மெய்த்துணையாய்த் தோற்றிய என்பதற்கு உண்மையான பாதுகாவலன் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஜகந்நாதன் அவர்கள் குலோத்துங்க சோழன் கோவையில் உள்ள கீழ்க்கண்ட பாடல் 64-ஐ மேற்கோள் காட்டிக் குலோத்துங்கனின் தம்பி சங்கரன் எனக் கூறுகிறார்.

"தேனார் கடலும் திருப்பாற் கடலும் திரைபுரண்டொன்-
றானாலெத் தன்மைத் தன்மையன் றோஅகி லாண்டமெல்லாம்
கோனாகும் சங்கரன்முன்னோன் குலோத்துங்கன் கோழிவெற்பின்
மானாரும் யானும் மணந்தஇப் பேரின்ப மாகடலே"

— குலோத்துங்கசோழன் கோவை 64



மேலே உள்ள பாடலில் "சங்கரன் முன்னோன் குலோத்துங்கன்" என்று வருவதால் - சங்கரனுக்கு முந்தையவன் குலோத்துங்கன் என்ற பொருள் கொண்டு குலோத்துங்கனின் தம்பி சங்கரன் என்றார். இந்த ஒரு வரியை மட்டும் படித்தால் இப்படி எண்ணத் தோன்றும். ஆனால் இப்பாடலில் உள்ள உவமையை நன்கு நோக்க வேண்டும்.

1. தேன் கடலும், திருப்பாற்கடலும் சேர்ந்தால் எத்தன்மையது?
2. அத்தன்மையன்றோ அகிலாண்டமெல்லாம் அரசாளும் (கோனாகும்)
3. சங்கரனும் குலோத்துங்கனும் சேர்ந்துள்ளது.
4. பெண்ணாகிய யான் இப்பேரின்பக் கடலை மணம் புரிந்தேன் என்று தலைவி கூறுகிறாள்.

தேன் கடல் சங்கரனுக்குச் சமம். திருப்பாற்கடல் குலோத்துங்கனுக்குச் சமம். இவை ஒன்றானால் எவ்வாறிருக்கும்? அவ்வாறே சங்கரனும் குலோத்துங்கனும் சேர்ந்து அகிலாண்டமெல்லாவற்றிற்கும் அரசர்களாக உள்ள தன்மை: இச்சேர்க்கையாகிய பேரின்பக் கடலை யான் மணந்தேன் என்கிறாள் தலைவி.

முதலில் கூறப்பட்ட தேன் கடலுக்கு சங்கரன் உவமையாவான். பின்பு கூறப்பட்ட திருப்பாற்கடலுக்கு குலோத்துங்கன் உவமையாவான். எனவே, சங்கரன் முன்னோன் எனில் அவன் முன்பு முடி சூடியவன் *(Predecessor)* என்றே பொருள் கொள்ள வேண்டும். பின்பு முடி சூடியவன் *(Successor)* குலோத்துங்கன் ஆவான். இங்குதான் கவிஞரின் கவிநயத்தைப் பார்க்க வேண்டும். தேன் கடலும், திருப்பாற்கடலும் சேர்ந்தால் பேரின்பக் கடல் அல்லவா? அதுபோல, சங்கரனும் குலோத்துங்கனும் சேர்ந்து அகிலாண்டமெல்லாம் அரசாளும் (கோனாகும்) செயல் உள்ளது எனக் கூறுகிறார் கவிஞர். தேனை ஒத்த சங்கரனாகிய முன்னோன்

இராஜாதிராஜனும் - திருப்பாற் கடலை ஒத்த குலோத் துங்கனும் (1178 முதல் 1182 வரை) இணைந்து அகிலாண்டமெல்லாம் அரசாண்டது - பேரின்பக் கட லாகும். சங்கரனாகிய இராஜாதிராஜன் 1166-இல் முடி சூடியவன். அவன் முன்னோன் ஆவான்; 1178-இல் முடி சூடிய குலோத்துங்கன் பின்னோன் ஆவான் எனப்படும் சரித்திர நிகழ்ச்சிகள் மறைமுகமாகக் கூறப் படுவதை அறியலாம். இருவரும் சேர்ந்து (1178 முதல் 1182 வரை) அரசாண்டனர் எனவும் அவ்வாட்சி தேன் கடலும் திருப்பாற்கடலும் கலந்த பேரின்பக் கடலாகும் என்பது கவிஞரின் வாக்கு. வரலாற்றுக்கு ஏற்ப சரித்திர நூல்களுக்குப் பொருள் கொள்ளவேண்டும். சரியான வரலாறு தெரியாவிடில் இம்மாதிரியான வரலாற்றுப் பிரபந் தங்களுக்கு விளக்கம் கொடுப்பது கடினம். கவிஞர் நயம் படக் கூறும் சரித்திர நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ள இயலாது. ஆனால் பாடல்களில் அகப்பொருள்களில் உள்ள பகுதிகளுக்கு விளக்கம் கூறும்போது - தலைவி - தலைவன் காதலைப் பற்றி நிறைய எழுதலாம். ஏன்? இது நவரசம் - ஐம்புலன் உணர்ச்சியை ஒட்டியது. இதை அறியாதவர் இருக்கமுடியாது.

சரித்திர சம்பந்தமான சரியான வரலாற்று வடிவத்தை நூலுடன் ஒப்பிட்டால் பாட்டுடைத் தலைவன், அவனது முன்னோர் மற்றும் பல நிகழ்ச்சிகளையும் பாடல்களில் காணலாம். அக்காலத்துக் கவிஞர் நயம்படக் கூறி விடுகிறார். அன்றைய சரித்திரத்தை இன்று அறிந்தால் தான் இம்மாதிரியான நூல்களுக்கு விளக்கம் கிடைக்கும். ஒரு கருத்தைச் சொல்லிவிட்டோம் என்பதற்காக வர லாற்றை மாற்ற முடியாது. பிற்காலத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்களுக்கு ஏற்ப வரலாற்று வடிவம் மாறும். இதற்கு ஒப்ப வரலாற்று நூல்களுக்கு விளக்கம் அளிப்பதே முறையாகும்.

# குலோத்துங்க சோழன் கோவை

குலோத்துங்க சோழன் கோவை எனப்படும் பிரபந்த நூல் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருந்தது. கடந்த நூற்றாண்டின் இறுதியில் திருநெல்வேலி வித்வசிகாமணி நெல்லையப்பக் கவிராஜர் அவர்கள் தமது புத்தக சாலையில் இச்சுவடிகளை வைத்திருந்தார். அவரே புத்தகப் பிரதி ஒன்றை எழுதினார். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்க நூற் பரிசோதகர் மு. ரா. அருணாசலக் கவி ராயர் அரும்பதவுரை எழுதினார். மதுரை மாவட்டம் பழ. சி. சண்முகம் செட்டியார் அவர்களது பொருளுதவி கொண்டு மதுரை விவேகபானு அச்சுயந்திர சாலையில் அச்சிடப்பட்டு 1910-இல் புத்தகமாக வெளிவந்தது. இதனை மு. இராகவ அய்யங்கார் அவர்கள் தமிழ்ச் சங்கம் செந்தமிழ் மூன்றாம் தொகுதியில் ஆய்ந்துள்ளார். அன்று இருந்த நிலையில் சோழர்களின் வரலாறு, காலக் கணிப்பு, வம்சாவளி ஆகியவை சரியாக வரையறுக்கப் படாததால் பாட்டுடைத்தலைவனை இன்னார் என அறிய முடியவில்லை. குலோத்துங்க சோழன் என்ற பெயரில் மூன்று சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர் களுள் ஒருவனே பாட்டுடைத் தலைவன். சோழர்களுக்கு உரித்தான கோழி என்னும் உறந்தை, புகார், தஞ்சை ஆகிய நகரங்களுக்குக் குலோத்துங்கன் தலைவன் என்பதைக் கோவை பல இடங்களில் கூறுகிறது. சங்கர சோழனுலா, சரித்திர நிகழ்ச்சிகள், கல்வெட்டுக்கள் இவைகளின் துணைகொண்டு கோவையின் பாட்டுடைத் தலைவனை முதன்முதலாக சந்திப்போம்.

சங்கமராச குலோத்துங்கன் (பாடல் 2) காவிரி நந் நதியாதி சங்கமராச குலோத்துங்கன் (25) சங்கமராச வரோதயன் (29) காவிரிப் பூந்துறையாதி சங்கமராசக் குலோத்துங்கன் (40) கண்டமெல்லாம் கொண்டாடும் சங்கமராச குலோத்துங்கன் (41) எழுமேதினிக்கும் கோனாகும் சங்கமராச குலோத்துங்கன் (84) கோழிமன் சங்கமராச குலோத்துங்கன் (237) மனுகுல ராச சங்கம ராச குலோத்துங்கன் (343) தாமரைப் பொன் நாயகன்

சங்கமராச குலோத்துங்கன் (387) குடக்காவிரிவாய்ச் சோணாடன் சங்கமராச குலோத்துங்கன் (451) என்று பத்து இடங்களில் சங்கமனின் புதல்வன் குலோத்துங்கன் எனக் கோவை கூறுகிறது.

சங்கர சோழனுலா - இரண்டாம் இராஜராஜனை சங்கமன் என்ற புனைப்பெயரில் அழைப்பதை முன்பே கண்டோம். சங்கமனுக்கு நல்லமன், குமாரமகீதரன் என்று இரு புதல்வர்கள் இருந்தார்கள். குமாரமகீதரனே பிற்காலத்தில் ஆட்சி செய்த மூன்றாம் குலோத்துங்கன் என்பதையும் கண்டோம். எனவே, இக்கோவையின் பாட்டுடைத் தலைவன், இரண்டாம் இராஜராஜனின் புதல்வனாகிய மூன்றாம் குலோத்துங்க சோழன் என்பதை அறியலாம். இம்மன்னன் கி. பி. 1178 முதல் 1218 வரை அரசாண்டவன்.

சோழ நாட்டை வளம் பெருகச் செய்வது பொன்னி நதியாகிய காவிரி ஆறாகும். காவிரி நாட்டிற்கு தாங்கள் மன்னர்கள் எனக் கூறிக்கொள்வதில் சோழர்கள் பெருமிதம் அடைந்தனர். முதலாம் இராஜராஜ சோழன் 985-லிருந்து 1014 வரை அரசாண்டான். இவனது திருமலைக் கல்வெட்டு "அலைபுரியும் புனற்பொன்னி ஆறு உடைய சோழன் அருண்மொழி" என்கிறது. பெருந் தொகையில் உள்ள ஒரு பாடல் விக்கிரம சோழனைக் "குடக் காவிரி நாடா அகளங்கா" எனப் போற்று கின்றது. இப்பாரம்பரியத்தைக் குலோத்துங்க சோழன் கோவையும் கூறுகிறது. காவிரிக்கு மன்னன் குமார குலோத்துங்கன் (3) பொன்னி நாடன் குலோத்துங்கன் (7) காவிரித்துறை தஞ்சை குலோத்துங்கன் (22) 'தெண்ணீர் வரும் பொன்னி நாடன் குலோத்துங்கன் (255) பொய்யாத பொன்னி குலோத்துங்கன் (373) நதித் தாரைப் பொன்னி குலோத்துங்கன் (443) காவிரிப் பூந் திரையேந்து கோழிக் குலோத்துங்கன் (453) எனப் பலவாறாகக் கோவையில் காவிரி நாடன் எனக் குலோத்துங்கன் புகழப்படுகிறான்.



குலோத்துங்கன் தமிழ்ப் பற்றுக் கொண்டவன் என்பதை வண்டமிழைச் சொன்னாரை வாழ வைக்கும் கோழி குலோத்துங்கன் (17) தண்டமிழுக்கு பொன்னே வழங்கும் குலோத்துங்கன் (30) தமிழ்ப் பாவலர்க்குக் கார்மேகமன்ன குலோத்துங்கன் (35) தாயும் தமரும் எனத் தமிழ் தாங்கியத் தண்டமிழை ஆயும் கமகன் (அறிஞன்) குலோத்துங்தன் (94) தமிழ்க்கு ஈவோன் குலோத்துங்கன் (104) தண்டும், சிவிகையும், பாய்மாவும், பொன்னும் தமிழ்க்குதவும் கண்டன் (390). தென்பாற் தமிழ் தெரிசென்னி குலோத்துங்கன் (401) தண்டமிழுக்கு சிந்தாமணி நம் உறந்தைக் குலோத்துங்கன் (425) தமிழ் நூற்கவிக்கு நந்தாமிருகைக் குலோத்துங்கன் (461) எனக் கோவையும் கூறும்.

கல்வெட்டுக்களில் புயல் வாய்த்து எனத் துடங்கும் இம்மன்னனின் மெய்க்கீர்த்திகள் தமிழ்த் தேன் சொட்டச் சொட்ட எழுதப்பட்டு இருக்கும். படித்தவர்களே இவ் வின்பத்தைச் சுவைக்கமுடியும். விரிவுக்கு அஞ்சி விடுக் கிறேன். இம்மன்னனின் காலத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் "கம்ப இராமாயணம்" இயற்றினார் என்பது வரலாறு கண்ட உண்மை. இம்மன்னனின் பாட்டனாராகிய இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் மாக்கதை எனப் படும் பெரிய புராணத்தை இயற்றினார்[1] (கி. பி. 1139). இரண்டாம் குலோத்துங்கன் மறைவிற்குப் பிறகு அவனது மகனான இரண்டாம் இராஜராஜன் காலத்திலும் சேக்கிழார் வாழ்ந்தார். இதனை கி. பி. 1163-க்கு உரிய இராஜராஜனின் திருமழபாடிக் கல்வெட்டு உறுதி செய்கிறது.[2] இராஜராஜனின் மகனை மூன்றாம் குலோத் துங்கன் காலத்தில் சேக்கிழார் இறைவன் திருவடி அடைந்தார். குலோத்துங்கன் சேக்கிழாரின் நினைவாக சிதம்பரத்தில் "திருத்தொண்டர் சீர் உரைத்தார்" என்னும் நந்தவனத்தை ஏற்படுத்தினான் (கி. பி. 1185). நந்த வனத்திலிருந்து கொணரப்படும் மலர்களால் நடராசப்

பெருமானுக்கு நித்ய அர்ச்சனை செய்யவும் ஏற்பாடு செய்தான். இச்செய்தியைக் குலோத்துங்கனின் சிதம்பரம் கல்வெட்டு கூறுகிறது.[3] இம்மன்னனின் ஆட்சியில் வீராந்தப் பல்லவராயர் என்னும் பெருமான் அவைக்களப் புலவராக இருந்தார் எனத் திருக்கடையூர்க் கல்வெட்டு கூறுகிறது[4] (கி. பி. 1201). நேமிநாதம், வச்சனந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் ஆகிய இலக்கண நூல்களை இயற்றிய குணவீர பண்டிதர் என்பார் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர். இச்செய்தி வெண்பாப் பாட்டியல் பாயிரத்தில் காணக் கிடக்கின்றது. இம் மன்னனது 32-ஆம் ஆட்சியாண்டுக்குரிய (கி. பி. 1210) திருவாலங்காட்டுக் கல்வெட்டில் "அறநிலை விசாகன் திரைலோக்ய மல்லன் வத்சராஜன்" என்பவன் மகா பாரதத்தை இனிய தமிழில் எழுதினான் எனக் கூறப்பட்டுள்ளது.[5] ('பாரதந்தன்னை அருந்தமிழ்படுத்தி சிவநெறி கண்டவர்' என்பது கல்வெட்டு வாசகம்). அப்புலவர் எழுதிய மகாபாரதம் இன்றுவரை கிடைக்கவில்லை. நன்னூல் எனப்படும் இலக்கண நூலைப் பவணந்தி முனிவர் என்பார் குலோத்துங்கன் காலத்தில் இயற்றினார். திருவெள்ளறைக் கல்வெட்டுக்கள், குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த கவிராஜரான திரிபுவனக் கவிச் சக்கரவர்த்திகள் சகலவித்யா சக்கரவர்த்தி என்னும் புலவரை அறிமுகப் படுத்துகின்றன. இப்புலவரின் இயற்பெயர் 'திருத்தேர் பொன் வேய்ந்த பெருமாள் கற்பகவில்லி வாஜபேயாஜி' என்பதாகும்.[6]

குலோத்துங்கன் சேரரையும், பாண்டியரையும், ஈழத்தையும் வென்றான். வழுதியர் சேரர் திறை தரவே அவன் சிறையை விடுத்து 'அழுதுயர் மாற்றும் குலோத்துங்கன் (461) 'சேரர் பாண்டியர்தம் ஆங்காரம் தீர்த்த குலோத்துங்கன்' (467) 'வெகுண்ட மதுரைக் கரியோட வென்ற குலோத்துங்கன்' (480) எனக் கோவையில் கூறப்பட்டுள்ளது. இச்சரித்திர உண்மைகளை குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியும், விருதுப் பெயர்களும் விரிவாய் எடுத்து உரைக்கின்றன. இம்மன்னனின் கல்வெட்டுக்கள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய



குலோத்துங்கன் என்றும் "மதுரை கொண்டருளிய குலோத்துங்கன்" எனவும் அறிமுகம் செய்கின்றன. சேரனூர், குடுமியான் மலைக் கல்வெட்டுக்கள், "திருவிழந்த தென்னவனும் சேரனும் வந்திறைஞ்சி அரியணையின் கீழ் இருப்ப ............படி வழங்கி பாண்டியர்க்கு விடை கொடுத்து ............ பார் அறிய வாழ்வருளி ............ சோழ பாண்டியன் என்று வீரர்கள் களிப்ப ............ வழுதியரைக் கொண்ட பாண்டி மண்டலத்தைச் சோழ பாண்டிய மண்டலம் என்று எழு பாரும் செல நிறுத்தி ............ தார் வழுதி மண்டபத்தில் சேர பாண்டியர் தம்பிரான் என்று எழுதி ......... சிறை கொண்ட புனல்வையைச் சேர பாண்டிய மண்டலத்து இறை கொண்டு ........." என்று கூறுகின்றன. மீனவர் சேரரை வெண்கண்ட வீரம் விழுக்கவிஞரானவர் பாடுங் குலோத்துங்கன்" (195) எனக் கோவை கூறுவதை "மதுரை கொண்ட தோள்வலி பாடிய பாணனைப் பாண்டியன் என்று பட்டம் சூட்டினான்" என்று கல்வெட்டும் கூறுகிறது.[7]

1194-இல் குலோத்துங்கன் கொங்கு நாட்டின்மீது படையெடுத்து கொங்கு மன்னனைத் திறை செலுத்தும் படிச் செய்தான். கருவூரில் சோழ கேரளன் என்று மன்னர் தொழ விசையமாமுடி வீரமாமுடி புனைந்தான்.[8] கொங்கு நாட்டை வென்றதன் காரணமாக கொங்கான சோழ கேரள மண்டலம் எனப் பெயரிட்டான். இச் இச்செய்திகளைக் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்திகள் உறுதி செய்கின்றன. ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய குலோத்துங்கன் என்று பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கீழையூர்க் கல்வெட்டு மன்னனைத் "திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோழ கேரள தேவர்" என அறிமுகப்படுத்துகிறது.[9] குலோத்துங்கனின் கொங்கு மண்டல வெற்றியை, கொங்கு ஓட்டும் வேங்கைக் கொடியோன் குலோத்துங்கன் (82) கொங்கு ஓடக் குத்தும் களிற்றான் குலோத்துங்கன் (133) என்று கோவையும் கூறும்.

மன்னர்களை வென்ற போதிலும் அவர்களுக்குப் பாதுகாவலனாக விளங்கினான் குலோத்துங்கன். இதனால் இராசாக்கள் தம்பிரான் என்று அழைக்கப் பட்டான்.[10] கல்வெட்டுக்கள் கூறும் இச்செய்தியினைக் கோவையும் - வேந்தர்க்கெல்லாம் தலையாக்கும் செம் பொற் சரணான் குலோத்துங்கன் (5) எம்மன்னவர்க்கும் தானே தலைமைப் பெருமான் குலோத்துங்கன் (28) அவனிக்கு எல்லாம் தானோர் தலைமைப் பெருமான் குலோத்துங்கன் (92) என நயம்பட எடுத்துரைக்கின்றது.

பாண்டியர்களுக்குள் தாயாதிச் சண்டையும் உள் நாட்டுப் போரும் மூண்டன. ஒரு சாரார் இலங்கை மன்னன் உதவியையும் மற்றவர்கள் சோழர்களின் உதவியையும் நாடினர். 1169-இல் இலங்கை மன்னன் பராக்கிரம பாகு இராமேஸ்வரம் தீவைப் பிடித்துக் கொண்டான். பாண்டியர்களிடையே ஒற்றுமையில்லாத காரணத்தால் இராமேஸ்வரம் தீவு இலங்கை மன்னன் கையில் இருந்தது. பராக்கிரம பாகு இறந்தபின் நிசங்க மல்லன் இலங்கை மன்னன் ஆனான். இராமேஸ் வரத்தில் பெரிய அரண்மனையும் கட்டிக்கொண்டான்.[11] பாண்டி நாட்டில் அமைதி ஏற்படுத்திய குலோத்துங்கன் இராமேஸ்வரம் தீவை மீட்கவும், ஈழத்து மன்னனைக் கொன்றுவிடவும் திட்டமிட்டான். "சிங்களவர் தலை அரியத் தென்னீழம் கொள்கவென்னத் திரைகடலை அடைக்கவென்னப் பொன்னிசூழ் நாடெங்கும் போர் மகளிர் காவலரும் நாற்றிசையும் காவல் பூண்டு" எச் சமயத்திலும் ஈழத்தின்மீது படையெடுக்கத் தயாரானான் எனத் திருவிடைமருதூர்க் கல்வெட்டு கூறுகிறது.[12] இதோ ஈழத்திலும் நுழைந்துவிட்டான். இனி கோவை கூறுவதைப் பார்ப்போம். இராவணனை யுகத்தான் பொருத குலோத்துங்கன் (18) தசமாமுகனைக் கம்மாய வெய்த குலோத்துங்கன் (32) பண்டு இராவணனைக் கட்டாண்மை தீர்த்த குலோத்துங்கன் (37) தசமுகன் பால் கூனும் சிலைக்கைக் குமார குலோத்துங்கன் (39) பண்டு இராவணனை ஆங்காரந் தீர்த்த குலோத்துங்கன்



(66) பெரு இராவணனைக் கொய்தாடல் கொண்ட குலோத்துங்கன் (416) பண்டு இராவணனைக் கொய்த வேந்தன்ன குமார குலோத்துங்கன் (424) புனல்சூழ் இலங்கை எரி தூது விட்ட குலோத்துங்கன் (490) எனக் கோவையில் குலோத்துங்கன் புகழப்படுகிறான். இராமனைப் போன்று குலோத்துங்கனும் இலங்கை மன்னன் ஒருவனைக் கொன்றான் என்று கோவை மறை முகமாக உணர்த்துகின்றது. இனி கல்வெட்டுக்களைப் பார்ப்போம்.

"சிங்களவர் தலை மலையாறத் தென்னீழங்கொள்க வென்ன திரை கடலை அடைக்க என்ன தென் இலங்கையர் கோன் தலையரிந்த திருநெடுமால் இவன் என்ன தென்னவனை (இலங்கை மன்னனை) தலை அரிந்து தேசமெல்லாம் இருள் அகற்றினான்" என்பதாகத் தீர்த்தநகரி, திருவெண்காடு, கோவிலூர் கல்வெட்டுக்கள் குலோத்துங்கனது இலங்கை வெற்றியை அழகுற எடுத் துரைத்து இராமாயணத்தைப் படம் பிடித்துக் காட்டு கின்றன.[13]

இராவணனைக் கொன்ற திருநெடுமால் போன்று விளங்கினான் குலோத்துங்கன் என்று கல்வெட்டு கூறு கின்றதே! அது எப்படி? திருமாலின் அவதாரம் இராமன் ஆவான். இராமனுக்கு ஒரே மனைவி. இப் பிறவியில் இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று கம்ப இராமாயணத்தில் இராமன் கூறுகிறான். குலோத் துங்கனுக்கு இரு மனைவிகள் இருந்தனர். அவன் கம்ப இராமாயணம் படித்தவன். எனவே இராமனுக்கு இழுக்கு வராவண்ணம், வீரத்தில் இராமன் போன்ற குலோத் துங்கன் ஸ்ரீதேவி பூதேவியுடன் கூடிய திருமால் போன்று விளங்கினான். சுவைக்க வேண்டிய கல்வெட்டுக்கள். கோவிலூர் கல்வெட்டு[14] இலங்கை வெற்றியை வேறு விதமாகச் சித்தரிக்கின்றது. "ஈழ மண்டலம் எறிவதாக அங்கிருந்து திசைக்கருங் கடல்மிசை தண்டேவிச் சென்று செருமலையாம் மண்டலத்தரசு நீக்கி அழகாய் சேனை

அழிவித்து வேளை கொண்டு விரும்புதற்கு வீரன் தன் (இலங்கை மன்னன்) மார்பில் வேலை கொண்டு பணி கொண்டு ......... இலங்காபுரி அன்னாள் இருந்ததென நேகக் கேட்டருளி ........" விளக்கமும் தேவையா ?

வேந்தரெல்லாம் தன்பாற் பணியும் சரணான் குலோத்துங்கன் (31) களத்து ஓடினாரைக் கொல்லேன் எனும் சொல் குமார குலோத்துங்கன் (89) என்று கோவை கூறுவது முற்றிலும் உண்மை. பாண்டிப் போரில் குலசேகர பாண்டியன், குலோத்துங்கனிடம் சரண் அடைந்தான் (கி. பி. 1202). சரணடைந்த பாண்டியனைக் கௌரவித்தான் குலோத்துங்கன் இதோ கோவிலூர்க் கல்வெட்டுக் கூறுவதைப் பாருங்கள்.

"............ வழுதி நாடு தனதாக்கி மதுரை நகர் திறைப்படுத்தி பூண்ட பெரும் போரில் வென்று ............ (பாண்டியன்) புகழ் மைந்தனைப் பேர் சாட்டி அபயம் என்று வருதலால் - அரசியாற்கையோடு கூட வந்து வணங்குதலும் - சினம் மறந்து திருவுள்ளமாய் தென்ன வனாம் என மொழிந்து பட்டொளியும் திவ்யாசனமும் பரிசட்டமும் நல்கி அரசும் ஆண்மையும் அவர்க்களித்து - அணி மதுரை அவற்காக்கி விடை கொடுத்து............"
பலமுறைப் படித்துச் சுவைக்கவேண்டிய கல்வெட்டு.

முதலாம் இராஜராஜ சோழன் கி. பி. 985 முதல் 1014 வரை அரசாண்டவன். இவன் காலத்தில் நில அளவை *(Land Survey)* மேற்கொள்ளப்பட்டது. மன்னனின் ஸ்ரீபாதத்தால் மூன்று முறை அளக்கப்படும் நீளம் ஓர் அடியான உலகளந்த கோலாக *(Standard Measurement)* ஏற்கப்பட்டது. இதனைத் தென் மகாதேவ மங்கலத்துக் கல்வெட்டு நயம்படக் கூறுவதைப் பாருங்கள். "வாசுதேவ மகாவிஷ்ணு இராஜராஜனாகப் பிறந்து உலகத்தை அளப்பார்" என்று கூறும் இப்பகுதி சரித்திர நிகழ்ச்சியோடு திருமாலின் திரு விக்கிரம அவதாரத்தையும் நினைவுபடுத்துகின்றது.[15] குலோத்துங்கனது 38-வது ஆட்சியில் (1216) நில



அளவு மேற்கொள்ளப்பட்டது.[16] இந்த நிகழ்ச்சியை, மண்ணும் விண்ணும் அடியே அளந்த குலோத்துங்கன் (436) என்று கோவை அழகுற எடுத்துரைக்கின்றது. இங்கேயும் திருவிக்கிரம அவதாரத்தோடு நில அளவு செய்த நிகழ்ச்சி ஒப்பிடப்படுகின்றது.

வையம் மூன்றினுக்கும் அரசே (256) புவனாதி தீரன் (290) என்று குலோத்துங்கனைக் கோவை புகழ்கின்றது. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கிய குலோத்துங்கன் திரிபுவன வீரதேவன் என்று அழைக்கப் பட்டான். திருவாரூர்க் கல்வெட்டில் ஆரூர்ப் பெருமான் குலோத்துங்கனை "நம் தோழன் திரிபுவன வீரன்" என்று அழைப்பது போன்று கூறப்பட்டுள்ளது.[17] குலோத்துங்கனது 24-ஆம் ஆட்சிக்குப் பின் வெட்டப் பட்டுள்ள பல கல்வெட்டுக்கள் மன்னனைத் திரிபுவன வீரதேவர் என்று அறிமுகம் செய்கின்றன.

இத்துணை பெருமை வாய்ந்த மன்னனைப் புகழா பரணன் காதே தரித்த குலோத்துங்கன் (457) என்று கோவை கூறுவது முற்றிலும் பொருந்தும். நன்னிலம் வட்டம் கண்கொடுத்தவனிதம் சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டு குலோத்துங்கனுக்கு உரியது.[18] அரசனின் அதிகாரி குலோத்துங்கனின் பெயரால் புகழாபரணீஸ்வரம் என்ற கோயிலை எடுப்பித்தான் என்று கூறப்பட்டுள்ளது. புகழாபரணன் என்பது குலோத்துங்கனின் விருதுப் பெயராகும். ஸ்ரீரங்கப் பெருமாள் விக்கிரம சோழன் பெரிய திருமண்டபத்து புகழாபரணன் திரு முத்தப்பந்தல் கீழ் சேரர் பாண்டியர் தம்பிரான் திருப் பள்ளிக் கட்டிலில் எழுந்தருளி இருக்க அவெல் அமுதுக்கு நிலங்கள் அளிக்கப்பட்டன என்று கூறும் ஸ்ரீரங்கம் கல்வெட்டு குலோத்துங்கனது பெருமையை நினைவுப் படுத்துகிறது.

பக்தியால் உருகி நாகாபரணனை (சிவபெருமானை) ஏத்தும் குலோத்துங்கன் (88) என்று கோவை கூறுவதை விளக்க ஒரு அத்தியாயமே எழுதலாம். இடமின்மை

காரணமாகச் சுருக்கமாக எழுதுகிறேன். கும்பகோணம் அருகே திரிபுவனத்தில் திரிபுவன வீரேச்வரம் என்னும் மிகப் பெரிய கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலின் கல்வெட்டு குலோத்துங்கன் தில்லை நடராசப்பெருமானின் ஏக பக்தன் எனக் கூறுகிறது. குலோத்துங்கனின் ராஜகுரு சோமேஸ்வரர் இக்கோயிலில் சிவபெருமானையும், பார்வதி தேவியையும் பிரதிஷ்டை செய்தார். இவரே சித்தாந்த ரத்னாகரம் என்னும் நூலையும் எழுதியவர். பாண்டிய நாட்டை வென்றபோது, "திருவாலவாய் சொக்கர் பெருமானைத் தொழுது இறைஞ்சி அனேக ஆபரணங்களை அளித்தான். சொக்கர்க்குத் திருப்பவனி கண்டருளி திருவீதியில் நின்று சேவித்தான். திறையால் வந்த பொன்னைத் தில்லை நடராசர் ஆலயம், சிவகாமி அன்னையின் கோயில், திருவாரூர்ப் பெருமான் கோயில், திரிபுவன ஈச்வரம், மதுரை சொக்கர் கோயில் ஆகிய பல ஆலயங்களுக்கு அளித்து, அவ்வாலயங்களைப் பொன் மயமாக விளங்கும்படி செய்தான். காஞ்சீபுரத்தில் ஏகாம்பரேஸ்வரருடைய கோயிலையும் தாராசுரத்தில் உள்ள இராஜராஜேஸ்வரம் கோயிலையும், திருவிடை மருதூர் கோயிலையும் இந்நிலவுலகில் பொன்மயமாக விளங்கும்படி செய்தான். திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட நாதர் கோபுரத்தையும், சபையையும் கட்டினான். இச் செய்திகளை திரிபுவனம், சேரனூர், குடுமியான்மலை, தாராசுரம் கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன.[19] "திருக் கயிலைச் சிவனருளால் தேசமெல்லாம் இருள் அகற்றி" குலோத்துங்கன் வெற்றிகள் அடைந்தான் என்று கல் வெட்டுக்கள் கூறுகின்றன.[20] திருவாலங்காடு (தஞ்சை மாவட்டம்) சிவன் கோயில் குலோத்துங்கனால் கட்டப் பட்டது. இக்கோயிலின் கல்வெட்டு குலோத்துங்கனை - சிவபாதசேகரன் (சிவபெருமானது திருவடிகளை சிரசில் தரித்தவன்) எனக் கூறுகின்றது.[21] சிரசில் சிவபெருமா னுடைய திருவடிகளைத் தரித்து, வாளை மார்போடு அணைத்து, கண்கள் தரையை நோக்க, பக்தியால் உருகி நாகாபரணனை ஏத்தும் குலோத்துங்கனுடைய சிலையை



மூன்றாம் குலோத்துங்க சோழன்
1178 -- 1218
([illegible])

இன்றும் திருவாலங்காடு (தஞ்சை மாவட்டம்) சிவன் கோயிலில் காணலாம்.

இக்கோவையை இயற்றியவர் யார் எனத் தெரியவில்லை. குலோத்துங்கன் 1178 முதல் 1218 வரை அரசாண்டான். உறந்தை குலோத்துங்க சோழன் நடாத்தும் செங்கோன்மை (4) என்று நிகழ்காலத்தில் சொல்லப்படுவதால், இக்கோவை குலோத்துங்கன் காலத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும். இம்மன்னன் காலத்தில் கி. பி. 1216-இல் நில அளவை மேற்கொண்ட செய்தியைக் கூறுவதால் இக்கோவை 1216-இல் இயற்றப்பட்டு இருக்கலாம்.

---

## FOOT NOTES

1. N. Sethuraman - 'The Cholas'
2. Tirumalavadi 95/1920 - year 17
3. Chidambaram 313/1958-59 - year 8 day 8
4. Tirukkadaiyur 255/1925 - year 23
5. Tirvalankadu 482 1905
6. A. R. E. 1938-39 - page 78. 7. Pd. 163 - Pd. 166
8. Achutamangalam 395/1925 - year 16
9. A. R. E. Kilaiyur (Theralundur) 75/1925 - year 23
10. S. I. I. XXIII - Tiruvidaimarudur 288-305
11. E. I. XXXVI - pages 23 to 32; N. Sethuraman - 'The Medievel Pandyas' - Chapter 'Ceylon'.
12. S. I. I. XXIII - Tiruvidaimarudhur 288
13. S. I. I. XVII 135 - year 15; Kovilur 183/1908 - year 25- Tiruvengadu 512/520/1918.
14. Kovilur 183/1908
15. Then Mahadeva Mangalam - 50/1933-34
16. Kovilur 208/1908.
17. S. I. I. XVII - 599
18. Tamil Nadu State Government - Nannilam inscriptions ;
19. S. I. I. XXIII Tirubhuvanam 190/Pd. 163 - Pd. 166
20. A. R. E. Tiruvalangadu 81/1926; Nannilam Inscriptions - Volume 2-317
21. Tiruvalangadu A. R. E. 1925

# இன்றியமையாத நிகழ்ச்சிகளும் அவை நிகழ்ந்த காலங்களும்

### நிகழ்ச்சிகள்

1143 — மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் - மதுரையில் முடி சூடினான்.

1145 — மாறவர்மன் ஸ்ரீவல்லப பாண்டியன் திருநெல்வேலியில் முடி சூடினான்.

1146 — இரண்டாம் இராஜராஜ சோழன் முடி சூடினான்.

1158 — இலங்கை பராக்கிரம பாகுவின் சகோதரி மகன் சடையன் ஸ்ரீவல்லபன் முடி சூடினான்.

1162 — மாறவர்மன் ஸ்ரீவல்லபன் இறந்தான்; அவன் மகன் சடையவர்மன் குலசேகரன் முடி சூடினான்.

1166 — இராஜாதிராஜ சோழன் முடி சூட்டப்பட்டான். குலசேகரன் பராக்கிரம பாண்டியனைக் கொன்றான்.

1169 — இராஜராஜன் மேலைச் சாளுக்கியரை அரியணை ஏற்றிப் பொய்யர்களான கலசூரி மன்னர்களை விரட்டினான். இலங்கைப்படை இராமேஸ்வரம் தீவைக் கைப்பற்றியது.

1170 — சிங்களவர் பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியனை முடி சூட்டினார்கள். குலசேகர பாண்டியன் சோழரின் உதவியை நாடினான்.

1173 — (அ) சோழர் தளபதி பெருமான் நம்பிப் பல்லவரையன் சிங்களவர் தளபதிகளின் தலைகளைக் கொய்து மதுரைக் கோட்டை வாசலில் தைப்பித்தான். வீர பாண்டியனை விரட்டிவிட்டு குலசேகரனை மதுரையில் அரியணை ஏற்றினான்.

(ஆ) **ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணி இயற்றினார்.**

(இ) இராஜராஜன் இறந்தான். அவன் மனைவிகள் நால்வரும் இறந்தனர். அவர்களின் பூத உடல்கள் மீது ஐந்து பள்ளிப்படைக் கோயில்கள் எழுப்பப்பட்டன.

(ஈ) பிற்பகுதியில் பெருமான் நம்பிப் பல்லவரையன் இறந்தான்.

1174 — இராஜாதி ராஜனின் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு.

1176 — சோழனின் தளபதி அண்ணன் பல்லவரையனும், பராக்கிரம பாகுவின் மருமகன் ஸ்ரீவல்லபனும் ஈழத்துள் நுழைந்து வட பகுதியை அழித்தனர்.

1177 — அண்ணன் பல்லவரையன் மதுரைமீது படையெடுத்துச் சென்று குலசேகரனை விரட்டி வீரபாண்டியனை மதுரை அரியணை ஏறச் செய்தான். இளங்கோவான குலோத்துங்க சோழன் குலசேகரனைக் கொன்று இருக்கலாம்.



### நிகழ்ச்சிகள்

1178 — இராஜராஜனின் இரண்டாம் மகனான மூன்றாம் குலோத்துங்கன் முடி சூடினான். குலோத்துங்கனின் அண்ணனான நல்லமன் என்ற நாயகன் அரசுரிமை ஏற்காது அறிஞனாக விளங்கினான்.

1181 — ஸ்ரீவல்லபன் இறந்தான். அவன் மகன் மாறவர்மன் விக்கிரம பாண்டியன் முடி சூடி திருநெல்வேலிப் பகுதியில் இருந்தான். வீரபாண்டியன் மகிழ்வோடு மதுரையில் இருந்தான்.

1182 — **இராஜாதி ராஜனைப் போற்றி 'சங்கர சோழன் உலா' இயற்றப்பட்டது. இராஜாதி ராஜன் ஆந்திரம் சென்றான்.**

1186 — குலோத்துங்கன் சிங்களவரையும், வீரபாண்டியனையும் தோற்கடித்து மதுரையில் விக்கிரம பாண்டியனை அரியணை ஏற்றினான். தனது தந்தை பள்ளிப்படை இராஜகெம்பீர ஈஸ்வரமுடையார் கோயிலுக்கும் தாராசுரத்து இராஜ ராஜேசுரமுடையார் கோயிலுக்கும் பொன் வேய்ந்தான்.

1190 — மதுரையில் விக்கிரம பாண்டியன் இறந்தான். அவன் மகன் சடையவர்மன் குலசேகரன் முடி சூடினான்.

1193 — குலோத்துங்கன் ஈழத்துள் புகுந்து இலங்கை மன்னனைக் கொன்றான்.

1194 — குலோத்துங்கன் கொங்குமண்டலம் கொண்டு கரூரில் வீராபிஷேகம் செய்துகொண்டான்.

1195 — குலோத்துங்கன் வீரபாண்டியனைக் கொன்றான். கேரள மன்னனை மன்னித்தான்.

1203 — மதுரைப் போரில் குலசேகர பாண்டியன் - குலோத்துங்கனிடம் சரண் அடைந்தான். குலோத்துங்கன் குலசேகரனை மரியாதையுடன் நடத்திப் போற்றினான்.

1204 — குலோத்துங்கன் திரிபுவனத்தில் திரிபுவன ஈஸ்வரம் என்ற மிகப் பெரிய கோயிலைக் கட்டினான். திரிபுவன வீரதேவன் என்றும் அழைக்கப்பட்டான்.

1216 — (அ) இராஜாதிராஜன் மறைந்தான்.

(ஆ) **குலோத்துங்க சோழன் கோவை இயற்றப்பட்டது.**

1218 — சுங்கமில்லாச் சோணாட்டில் சோற்றுமலை கண்டருளி - திருக்கயிலைச் சிவன் அருளால் தேசம் எல்லாம் இருள் அகற்றி - பக்தியால் உருகி நாகாபரணனைத் துதித்து - சிவபாதசேகரன் என்ற பெயரை ஏற்ற குலோத்துங்க சோழன் இறைவன் திருவடி அடைந்தான்.

**(பிற சேர்க்கை)**

## இரண்டாம் இராஜாதிராஜனின் முடி சூடிய காலம்

## இராஜாதிராஜனின் ஆந்திர மாநிலக் கல்வெட்டுக்கள்

| S. I. I IV | யாண்டு | சகம் |
| --- | --- | --- |
| 1223 | 28 | 1115 |
| 1331 | 28 | 1116 |
| 1332 | 29 | 1117 |
| 1218 | 30 | 1118 |
| 1002 | 31 | 1119 |
| 1279 | 35 | 1123 |
| 1257 | 40 | 1127 |
| 1117 | 46 | 1134 |
| 1118 | 47 | 1134 |
| 1330 | 49 | 1137 |

யாண்டு 28 சக வருடம் 1115-இலும் வருகிறது. 1116-இலும் வருகிறது. சகம் 1134-இல் யாண்டு 46-உம், 47-உம் வருகின்றன. இதனால் பூஜ்ய ஆண்டும், முதலாம் ஆண்டும் சகம் 1088 என்று ஆகிறது. அதாவது சகம் 1088-இல் இராஜாதிராஜன் முடிசூடினான் என்பதை அறிகிறோம். இதற்குச் சமமான கிறிஸ்துவ ஆண்டு 1166 ஆகும். எனவே, இராஜாதிராஜன் 1166-இல் முடி சூடினான் என்பதை அறியலாம். இதன் அடிப்படையில் தமிழ் நாட்டில் உள்ள இராஜாதி ராஜனின் கல்வெட்டுக்களைப் பார்ப்போம்.

## இராஜாதிராஜனின் தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்

(சு-5 - சுக்ல பக்ஷ பஞ்சமி; அ-11 - அபரபக்ஷ ஏகாதசி)

| சாசன எண் | ஊர் | யாண்டு - வானிலைக் குறிப்புகள் | கிறிஸ்துவ தேதி |
| --- | --- | --- | --- |
| 538/1904 | திருவாரூர் | 2, மேஷம், சு-6, புனர்வசு, திங்கள் | 15- 4-1168 |
| 241/1927 | கொட்டையூர் | 3, ரிஷபம், சு-5, பூசம், சனிக்கிழமை | 3- 5-1169 |
| 421/1912 | வழுவூர் | 5, கர்க்கடகம், சு-13, சனிக்கிழமை | 27- 6-1170 |
| 19/1913 | ஆடுதுறை | 5, துலா 15 தேதி, சு-9, அவிட்டம், திங்கள் | 12-10-1170 |
| 69/1931 | பந்தநல்லூர் | 5, துலா, சு-9, அவிட்டம், திங்கள் | 19-10-1170 |
| 607/1902 | முன்னியூர | 6, தனுர், சு-5, திருவோணம், வியாழன் | 2-12-1171 |
| 172/1908 | திருநறையூர் | 6, மீனம், சு-6, ரோகிணி, வியாழன் | 2- 3-1172 |
| 224/1917 | கொருக்கை | 6, மிதுனம், சு-3, புனர்வசு, சனிக்கிழமை | 27- 5-1172 |
| 311/1921 | திருக்கோயிலூர் | 7, கன்னி, 25 தேதி, சுவாதி, வியாழன் | 21- 9-1172 |
| 627/1902 | திருவலஞ்சுழி | 8, சிம்மம், அ-12, புனர்வசு, திங்கள் | 6- 8-1173 |
| 158/1932 | திருப்புறம்பயம் | எட்டாவது, விருச்சிகம் தேதி 24, சு, பரணி திங்கள் | 19-11-1173 |
| 122/1928 | அய்யம்பேட்டை | 8, தனுர், அ-12, விசாகம், திங்கள் | 3-12-1173 |
| 343/1921 | திருக்கோயிலூர் | 8, மாசி 26, பூரம், திங்கள் | 18- 2-1174 |
| 619/1902 | திருவலஞ்சுழி | 9, கும்பம், சு-9, ரோகிணி, சனிக்கிழமை | 1- 2-1175 |
| 403/1896 | திருவொற்றியூர் | 9, பங்குனி, அ-11, ஆயில்யம், புதன் | 5- 3-1175 |

| சாசன எண் | ஊர் | யாண்டு - வானிலைக் குறிப்புகள் | கிறிஸ்துவ தேதி |
|---|---|---|---|
| 340/1921 | திருக்கோயிலூர் | 10, சிம்மம், சு-1, பூரம், திங்கள் | 18- 8-1175 |
| 134/1936 | தெற்குக்காடு | 10, விருச்சிகம், சு-2, மூலம், திங்கள் | 17-11-1175 |
| 251/1951 | திருக்குவளை | 10, மகரம், சு-12, ரோகிணி, வெள்ளி | 26-12-1175 |
| 540/1904 | திருவாரூர் | 10, மீனம், சு-13, மகம், செவ்வாய் | 24- 2-1176 |
| 394/1902 | திருநள்ளாறு | 11, சிம்மம், சு-5, சுவாதி, புதன் | 11- 8-1176 |
| 428/1912 | வழுவூர் | 12, சிம்மம், அ-8, ரோகிணி, வியாழன் | 18- 8-1177 |
| 603/1963 | திருவாய்மூர் | 12, மகரம், அ-11, மூலம், திங்கள் | 16- 1-1178 |
| 571/1907 | நந்தலூர் | 12, ஹேவிளம்பி வருடம், மகரம், சு-1, அவிட்டம் சனிக்கிழமை | 21- 1-1178 |
| 132/1927 | ஆத்தூர் | 12, கும்பம், சு-13, பூசம், வியாழன் | 2- 2-1178 |
| 451/1912 | கோட்டூர் | 13, கர்க்கடகம், சு-7, சுவாதி, சனிக்கிழமை | 22- 7-1178 |
| 80/1913 | திருச்செங்காட்டங்குடி | 13, சிம்மம், அ-9, புதன் | 9- 8-1178 |
| 389/1921 | திருவதிகை | 13, விருச்சிகம் 20 தேதி, திருவோணம், வியாழன் | 16-11-1178 |
| 133/1927 | ஆத்தூர் | 13, மகரம், அ-10, விசாகம், வியாழன் | 4- 1-1179 |
| 537/1921 | நீடூர் | 14, விருச்சிகம், சு-13, அஸ்வதி, செவ்வாய் | 13-11-1179 |
| 188/1925 | கிடாரம்கொண்டான் | 14, தனுர், சு-15, திருவாதிரை, வியாழன் | 15-12-1179 |
| 11/1925 | பல்லவராயன்பேட்டை | 15, மிதுனம், அ-10, அஸ்வதி, திங்கள் | 8- 6-1181 |



பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டின்படி (11/1925) 1166 மிதுன அஸ்வதி பூஜ்ய ஆண்டாகும். இந்நாள் ஜூன் 23-ஆம் தேதி. கோட்டூர்க் கல்வெட்டின்படி (451/1912) 1166 கர்க்கடக சுவாதி முதலாம் ஆண்டாகும். இந்நாள் ஜூலை 7-ஆம் தேதி. எனவே, **இராஜகேசரிவர்மன் இராஜாதிராஜன் 1166-இல் ஜூன் மாதம் 24-ல் இருந்து ஜூலை 7-ஆம் தேதிக்குள் முடி சூடினான்.** 538/1904; 540/1904; 627/1902; 394/1902 - ஆகிய கல்வெட்டுக்கள் கீல்ஹார்னால் ஆராயப்பட்டவை. அவைகளும் 1166-ஐ முதலாம் ஆண்டாகச் சுட்டிக் காண்பிக்கின்றன.

---

## குலோத்துங்க சோழன் கோவையில்

**509 பாடல்கள் உள்ளன.**

**ஒரு சில பாடல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன**

பிறையாயு மங்கை நுதலுக்கொவ் வாய்பிறை போய்க்கலையி
னிறையாய போது முகத்துக்கொவ் வாய்நெடுங் காவிரிப்பூந்
துறையாதி சங்கம ராசகு லோத்துங்க சோழன்வெற்பின்
மறையாநிற் பாய்வரு வாயென்ன நாண மதியுனக்கே (40)

கோங்கார் முகிண்முலை யாய்மெய்யு நீழலுங் கூர்பொருளும்
பாங்கா முரையும் பிரிவதுண் டோபண் டிராவணனை
யாங்காரந் தீர்த்த குலோத்துங்க சோழ னளகைவெற்பின்
னீங்காநின் காதலி தன்னுடன் வாவினி நீவரிலே (66)

கொங்கோட்டும் வேங்கைக்கொடியோன் குலோத்துங்கன் கோழி [வெற்
லங்கோட்டு மென்களத் தாயென்சொல் வேளரன் மூத்தமைந்தன்
வெங்கோட்டி யானை முகனைமுன் பாய்வெய்ய கோட்டுருவாஞ்
செங்கோட்டி யானைகண்டேனஞ்சினேனஞ் சிலம்பிலின்றே. (82)

மீனவர் சேரரை வெந்கண்ட வீரம் விழுக்கவிரு
ரானவர் பாடுங் குலோத்துங்க சோழ னளகைவெற்பில்
வானவ ரூரமிர் தைப்பசித் தோர்பெற வாஞ்சிப்பதிக்
கானவ ரூரமிர் தைத்தமி யேன்பெறக் காமிப்பதே. (195)

பரசே தரித்த கரத்தான் முனிமதன் பைக்கொடியே
முரசே பெருந்தந்தை மாலிகை யேவைய மூன்றினுக்கு
மரசே செலுத்துங் குலோத்துங்க சோழனளகைவெற்பிற்
கரைசேரு நானெந்த நாள்வினை யேனுட் கவலைவிட்டே
(256)

கைதான் வில்வாங்கி லுடையாப் படையில்லை காய்ந்தொரம்பு
பெய்தா லெவருய்வ ரோதெய்வ மேபெரு ராவணனைக்
கொய்தாடல் கொண்ட குமார குலோத்துங்கன் கோழிவெற்பி
வெய்தா மினத்துடன் விட்டே கினரென்பர் மெய்யருளே. [ன்
(416)

அவ்வேந்தர் வெம்பரித் தேர்போ முனேநின் னரிவைமுன்றிற்
கிவ்வேந்தர் வெம்பரித் தேர்வருங் காண்பண் டிராவணனைக்
கொய்வேந்த னன்ன குமார குலோத்துங்கன் கோழிவெற்பிற்
றெவ்வேந்தர் மேற்பொர வென்றேகினு நன்று தேன்மொழியே
(424)

வந்தாருக் கீதலும்போவாரை மீட்டலும் வந்தெதிர்ந்தோர்
தந்தா யெனுமன்புந் தன்புறங் காத்தலுந் தண்டமிழ்க்குச்
சிந்தா மணிநம் முறந்தைக் குலோத்துங்க சென்னிவெற்பி
னந்தாம வோதிநின் மாதுக்கொப் பாமவ் வறத்தெய்வமே.
(425)

வழுதியர் சேரர் திரைதர வேவன் சிறையைவிடுத்
தழுதுயர் மாற்றுங் குலோத்துங்க சோழ னளகையனனீர்
தொழுதிரு போது முமைநினைப் பேனன்றிச் சூழ்மனைவா
யெழுதிய பாவையைப் பாவையென் னேன்குற்ற மெய்து
மென்றே. (466)

193921